Registered as a News Paper in Sri Lanka.

பக்கங்க...

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY ● மக்கள் தினசரி ●

நாதம் 01 | பிரமோதூத ஷூ வைகாசி மீ 13 ஆம் உ | ஞாயிற்றுக்கிழமை | (27 - 05 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஜுல்ஹஜ 02 | ஓசை 98

## இலங்கையர் சாதாரண வருவாயில் கௌரவமாக வாழ்கின்றனர்

சாதாரண வருவாயைக்கொண்டு மனத்திருப்தியுடன் கௌரவமாக வாழ முடியும் என்பதனை இலங்கையும் சீனாவும் நிரூபித்துள்ளன என்று ஐக்கியநாடுகள் அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

கைத்தொழில் மயமான, வளர்ச்சியடைந்த நாடுகளில் பதினோராயிரம் டாலர் சராசரி வருமானமாகக் கிடைத்தாலும் மனநிறைவான வாழ்க்கை அமைவதில்லை என ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அறிக்கை கூறுகின்றது. ஆனால் 400 டாலர்கள் சராசரி வருமானத்துடன் இலங்கை மக்கள் சராசரி 71 வயது வரைக்கும் வாழ்கிறார்களாம். இதேவேளை, முதியோர் கல்வி இலங்கையில் 81 சத விகிதமாக உள்ளது.

290 டாலர் சராசரி வருமானம் கொண்ட சீனாவில் மக்கள் சராசரி 70 வயது வரை வாழ முடிகிறதாம். முதியோர் கல்வி சீனாவில் 61 வீதமாக உள்ளதென்றும் அவ்வறிக்கை கூறுகிறது.

# விடுதலைப் புலிகள் தவிர எந்த குழுவுடனும் அரசு பேசாது!

## சர்வகட்சி மாநாட்டில் மட்டுமே இனி சந்திப்பு

(நமது அரசியல் நிருபர்)

விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியுடன் மட்டுமே இனி இலங்கையின் இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாணும் பேச்சுக்களை பிரேமதாசா அரசாங்கம் நடத்தவிருப்பதாக ஆளும்கட்சி வட்டாரங்களிலிருந்து அறியவருகிறது. ஈ. பி. ஆர் எல். எவ். என்ற ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வற்புறுத்தலின் பேரில் அமைச்சரவைப் பேச்சாளரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் பெருந்தோட்டத்துறை அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்தினா ஒரு தடவை மட்டுமே சந்தித்துப் பேசினார். இனி அந்தக் குழுவுடன் பேச்சு நடத்தவேண்டிய அவசியமே இல்லை என்று அவரே சொல்லியிருக்கிறார்,

ஈ. பி. ஆர். எல். எப்வுடன் முன்னர் கூட்டுச் சேர்ந்து இந்திய இராணுவத்தின் பாதுகாப்புடனிருந்த ரெலோ இயக்கம் அரசுடன் தனியாகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விரும்பிய போதிலும் அக்குழுவின் பிரதிநிதிகளைச் சந்தித்துப்பேசுவதற்கு அரசு விரும்பவில்லை.

இந்தியப்படையின் பாதுகாப்பில் இங்கு திரும்பிவந்து அவர்கள் பாதுகாப்பிலேயே தங்கியிருந்து அவர்களுக்கு முன்பாகவே தப்பி ஓடிய குழுக்களை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்ததும் அதை அரசு ஏற்று அவர்களைச் சந்தித்துப் பேசச் சந்தர்ப்பம் அளிக்கமுன்வந்ததும் விடுதலைப் புலிகளுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

இதன்பின் கொழும்புக்குச் சென்று அரசுடன் பேச்சு நடத்த விடுதலைப் புலிகள் விரும்பாததனால் நீதிஅமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர்களைச் சந்தித்துப் பேசித் திரும்பினார். மீண்டும் ஜனாப் ஹமீத் நாளை யாழ்ப்பாணம் வந்து மக்கள் முன்னணித் தலைவர்களைச் சந்தித்துப் பேசவிருக்கிறார்.

கடந்த வாரம் நடந்த பேச்சுவார்த்தைகளில் விடு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தவறிழைக்கும் அதிகாரிகள்மீது நீதிமன்ற நடவடிக்கை!

### - பிரேமதாசா

(கொழும்பு)

அரசாங்க உத்தியோகத்தர்கள் கட்சி, சாதி, இன, மத வேறுபாடுகள் இன்றி எப்போதும் நியாயமாக கடமைபுரிய வேண்டும் என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசா ஆலோசனை தெரிவித்துள்ளார்.

கண்டி திரித்துவக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற மாநாடு ஒன்றில் ஜனாதிபதி உரையாற்றினர்.

கட்சி, இன அடிப்படையில் செயற்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் இங்கு குறிப்பிட்டார்.

வேலை வாய்ப்பின்போது தகுதி அடிப்படை, இன விகிதாசாரம் போன்றவற்றைக் கடைப்பிடிக்கவேண்டும் என்ற

(6ஆம் பக்கம் பார்க்க)

## விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவு வவுனியாவில் இயங்கவில்லை

(வவுனியா)

வவுனியா கச்சேரியில் உள்ள நிறுவை - அளவை பிரிவும், விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவும் தொடர்ந்து இயங்காத காரணத்தினால், இப்பகுதி மக்கள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர்.

பல விற்பனை நிலையங்களிலும், கடைகளிலும் நிறுவை அளவைகளில் மோசடி இடம்பெற்று வருவதாகவும், கிராமப்புறக் கடைகள் பலவற்றில் கட்டுப்பாட்டு விலையை மீறி பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக புகார்தெரிவிக்கப்பட்டுள்ளது.

கச்சேரியில் உள்ள நிறுவை அளவைப் பிரிவும், விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவும் இயங்கினால், மக்களின் கஷ்ட நிலையைப் போக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா நீதிமன்றம் இயங்காத காரணத்தினாலேயே மேற்படி அலுவலக வேலைகளைத் தொடர முடியவில்லை என்று இதோடு சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நீதிமன்றம் கடந்த ஆண்டு தீவைத்துக் கொழுத்தப்பட்டது தெரிந்ததே. (தி)

## முல்லைத்தீவிற்கு
## வீதி திருத்தத்திற்கு 30மில்லியன் பிரிட்டிஷ் அரசு உதவி!

(முல்லைத்தீவு)

நெடுங்கேணி - முல்லைத்தீவு பிரதான பாதையை முழுமையாக திருத்தியமைக்க பிரிட்டிஷ் அரசு முப்பது மில்லியன் ரூபாவை வழங்கவுள்ளது.

முல்லைத்தீவுக்கு விஜயம் செய்த இலங்கையின்பிரிட்டிஷ் தூதுவர் திரு. டேவிற் கிளாஸ்டோன் இதனைத் தெரிவித்தார்.

கருங்கல் உடைக்கும் அதிசக்தி வாய்ந்த கிறசர் இயந்திரம் வழங்குவதாகவும் அவர் உறுதி கூறினார்.

முல்லைத்தீவு கச்சேரியில் அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் தலைமையில் நடந்த மாநாட்டில் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

பிரிட்டிஷ் தூதுவரும் அவ...

## விடுதலைப்புலிகள்
## மகளிர் அணியினரின் முதலாவது மகாநாடு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின்மகளிர் அணியினரின் முதலாவது மகாநாடு இன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகவுள்ளது. இவ் மகாநாடு தொடர்ந்து மூன்று நாளைக்கு நடைபெறவுள்ளது.

யாழ். வின்ஸர் திரையரங்கில் நடைபெறும் இம் மகாநாட்டை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா ஆரம்பித்து வைப்பார் விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் உட்பட விடுதலைப்புலிகள் முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொள்வார்கள்.

## நான்கு நாட்களின் பின் சடலம் அடையாளம் காட்டப்பட்டது

(விசேட நிருபர்)

கடந்த (23 - 5 - 90) புதன் கிழமை இரவு வீட்டைவிட்டு வெளிக்கிட்ட இளைஞன் நேற்று (26-8-90) பிணமாக மீட்கப்பட்டான்.

மருந்து எடுத்து வருவதாகப் புறப்பட்ட இளைஞன் வீடு திரும்பவில்லை. மாமனார் வீட்டில் தங்கும் பழக்கம் இருப்பதால் பெற்றோர் கவனம் எடுக்கவில்லை-

மாமனார் வீட்டில் இருந்து வந்தவர்கள் இரண்டு நாளாகக் குறிப்பிட்ட இளைஞர் ஏன் வரவில்லை எனக்கேட்ட ...

### வான் - லொறி

## நாம் எவரையும் நசுக்கவில்லை எமக்கு தேவை தமிழீழம் மட்டுமே

(யாழ்ப்பாணம்)

... டும் என்றோ என்றைக்கும் ...

தப்பட்டது தெரிந்ததே. (தி)

# வீதி திருத்தத்திற்கு 30மில்லியன் பிரிட்டிஷ் அரசு உதவி!

(முல்லைத்தீவு)

நெடுங்கேணி - முல்லைத்தீவு பிரதான பாதையை முழுமையாக திருத்தியமைக்க பிரிட்டிஷ் அரசு முப்பது மில்லியன் ரூபாவை வழங்கவுள்ளது.

முல்லைத்தீவுக்கு விஜயம் செய்த இலங்கையின்பிரிட்டிஷ் தூதுவர் திரு. டேவிற் கிளாஸ்டோன் இதனைத் தெரிவித்தார்.

இந்த வீதி திருத்த கருங்கல் தட்டுப்பாடு ஏற்படுமானால் கருங்கல் உடைக்கும் அதிசக்தி வாய்ந்த கிறசர் இயந்திரம் வழங்குவதாகவும் அவர் உறுதி கூறினார்.

முல்லைத்தீவு கச்சேரியில் அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் தலைமையில் நடந்த மாநாட்டில் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

பிரிட்டிஷ் தூதுவரும் அவரது பாரியாரும் நெடுங்கேணியிலிருந்து தண்ணீருற்று வரை

(6ஆம் பக்கம் பார்க்க)

## தொலைபேசி ரெலக்ஸ்

# 15 நாட்களுக்குள் கட்டணம் செலுத்தத்தவறின் துண்டிப்பு

(கொழும்பு)

தொலைபேசி ரெலக்ஸ் பாவனையாளர்கள் தமது மாதாந்த கட்டணத்தை15நாட்களுக்குள் அதனைச் செலுத்த வேண்டும் என்று தபால்தந்தி அமைச்சின் செயலாளர் அசோகா குணசேகரா தெரிவித்துள்ளார்.

பல லட்சக்கணக்கான ரூபா நிலுவை பாவனையாளரிடம் இருந்து திணைக்களத்துக்கு வர வேண்டியிருப்பதாகவும் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் டிசம்பர் வரை 189 கோடி ரூபாவும இவ்வாண்டு 5 மாதங்களில் 110 கோடி ரூபா பெறப்பட்டதாகவும் அவர் சொன்னார்.

## மத்திய அரசின்

# தாபனம் பற்றிய கட்டளைகள் நிறைவேற்றுவதில்லை

(மட்டக்களப்பு)

மத்திய அரசின் கல்வி அமைச்சிலிருந்து அனுப்பி வைக்கப்படும் தாபனங்கள் தொடர்பான கட்டளைகளை செயல்படுத்துவதில்லை என வட-கிழக்கு மாகாண சபை கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அமைச்சு செயலாளர் திரு இ. ஜே. சற்குணராஜா தலைமையில் அண்மையில் நடைபெற்ற மாவட்ட கல்விப்பாளர்கள் மகா நாட்டில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

மத்திய அரசு நியமனம் வழங்கும் அதிகாரம் இதுவரை ஒப்படைக்கவில்லை ஆனால் தாபனங்களை வழங்கியுள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

# கட்டுத்துவக்கு வெடித்து மாணவன் ஸ்தலத்தில் பலி

(கிளிநொச்சி)

பன்றிக்கு வைக்கப்பட்ட கட்டுத்துவக்குடன் விளையாடிய பாடசாலை மாணவன் ஒருவன் அத்துவக்கு வெடித்ததால் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானான்.

இப்பரிதாப சம்பவம் முருகண்டியிலுள்ள இந்துபுரத்தில் இடம்பெற்றது. மேற்படி கிராமத்தில் வசித்து வந்த கருப்பையா கணேசன் (12 வயது) என்ற மாணவனே இவ்வாறு மரணமானவராவார்.

இவரது மரண விசாரணை கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் கிளிநொச்சி மரணவிசாரணை அதிகாரி டாக்டர் கே. திருலோகமூர்த்தியினால் மேற்கொள்ளப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி நா. சத்தியசீலன் பிரேத பரிசோதனையை மேற்கொண்டார்.

பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விரும்பிய போதிலும் அக்குழுவின் பிரதிநிதிகளைச் சந்தித்துப்பேசுவதற்கு அரசு விரும்பவில்லை.

இந்தியப்படையின் பாதுகாப்பில் இங்கு திரும்பிவந்து அவர்கள் பாதுகாப்பிலேயே ளைச் சந்தித்துப் பேச்சு சந்தர்ப்பம் அளிக்கமுன்வந்ததும் விடுதலைப் புலிகளுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

இதன்பின் கொழும்புக்குச் சென்று அரசுடன் பேச்சு நடத்த விடுதலைப் புலிகள் விரும்பாததனால் நீதிஅமைச் நாளை யாழ்ப்பாணம் வந்து மக்கள் முன்னணித் தலைவர்களைச் சந்தித்துப் பேசவிருக்கிறார்.

கடந்த வாரம் நடந்த பேச்சுவார்த்தைகளில் விடு

(6 ஆம் பக்கம் பார்க்க)

# நாம் எவரையும் நசுக்கவில்லை எமக்கு தேவை தமிழீழம் மட்டுமே

- ஆஞ்சநேயர்

(யாழ்ப்பாணம்)

நாம் எவரையும் நசுக்க வேண்டும் என்றோ அல்லது எவரையும் பழிவாங்க வேண்டும் என்றோ என்றைக்கும் எண்ணியதில்லை எமக்கு வேண்டியது பூரண சுதந்திரம் பெற்ற ஒரு தனி தமிழீழம் அமையவேண்டும் அங்கு எமது மக்கள் தாம் நினைத்தபடி வாழவேண்டும் என்பதே ஆகவே எமது போராட்டம் தமிழ் மக்களின் நலனை முழுமையாக கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என நேற்று இடம்பெற்றகைதிகள் விடுவிப்பு சம்பவத்தில் வலிகாமம் பகுதி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் உரையாற்றும்போது கூறினார்.

யாழ்ப்பாணம் பெருமாள் கோவில் முன்றலில் பெருந்தொகையான மக்கள் முன்னி

(6ஆம் பக்கம் பார்க்க)

## விஷமிகள் வீண் புரளி!

(அம்பாறை மாவட்ட நிருபர்)

சிறிலங்காஇராணுவத்தினர் சிலரை விடுதலைப்புலிகள் கைது செய்து வைத்திருப்பதாகவும் இதனால் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையில் பெரும மோதல் ஏற்படப் போகிறதென்றும் விஷமிகள் சிலர் நேற்று முன்தினம் வேண்டுமென்றே வீண் புரளிகளை கிளப்பிவிட்டதால் கல்முனை, அக்கரைப்பற்றுப் பகுதியிலுள்ள மக்கள் பீதியடைந்து பாதுகாப்பான இடங்களைத் தேடத் தொடங்கினர்.

பின்னர் இது விஷமிகளால் திட்டமிட்டு பரப்பப்பட்ட வீண்புரளி என்பது தெரிந்ததும் விஷமிகளைத் திட்டிக் கொண்டு அமைதியடைந்தனர்.

# திரையரங்கு மனேஜர் உதவி மனேஜருக்கு கத்திக்குத்து

(வவுனியா)

வவுனியா ஸ்ரீ முருகன் தியேட்டர் மனேஜர் திரு. சிற்றம்பலம் அவர்களும் உதவி மனேஜர் திரு. இராமநாத பிள்ளை அவர்களும் நேற்று முன்தினமிரவு இரண்டாம் கட்டப் படக்காட்சி பார்க்கச் சென்ற நபர் ஒருவரால் வயிற்றில் கத்தியால் குத்தப்பட்ட நிலையில் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

மேற்படி தியேட்டரின் இரண்டாம் கட்ட படக்காட்சி நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் இச் சம்பவம் நடைபெற்றது, மது போதையில் வந்த வவுனியா சூசைப் பிள்ளையார் குளத்தைச் சேர்ந்த நபரே மனேஜரையும் உதவி மனேஜரையும் கத்தியால் குத்தியவர் ஆவார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# மாகாணசபைக்கு நிபந்தனையுடன் ஆசிரியர் இடமாற்றம் ஒப்படைப்பு

(கொழும்பு)

ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதற்கான அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி அறிவித்துள்ளார்.

ஆனாலும் இந்த அனுமதியை சில நிபந்தனைகளுடன் உயர் கல்வி அமைச்சர் வழங்கியிருப்பதாக தேசிய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுத் தலைவர் ஜேர்ஜ் மென்டிஸ் தெரிவித்தார்.

பயிற்சி ஆசிரியர்கள் கஷ்டமான பிரதேசங்களில் உள்ளவர்கள் பாடசாலை நியமனம் பெற்றவர்கள் இவர்களை இடமாற்றம் செய்ய மாகாண சபைகளுக்கு அதிகாரம் கிடையாது.

இதேவேளை நியமனங்கள் இடமாற்றங்கள் தொடர்பாக மேன் முறையீடு செய்ய விரும்பும் ஆசிரியர்கள் கல்விச் சேவைக் குழுவை நேரடியாக தொடர்புகொள்ள விரும்பினால் அவர்கள் தமது முறையீட்டை எழுத்து மூலம் தயாரித்து சம்மந்தப்பட்ட மாகாணக் கல்விப் பணிப்பாளர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு

# நடமாடும் செயலகம் தேதி ஒத்திவைப்பு!

(கோட்டைமுனை)

வெல்லாவெளியில் அடுத்த மாதம் நடைபெறவிருந்த நடமாடும் செயலகம் அதற்கு அடுத்தமாதம் பதினாறாம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ஆர். யோகநாதன் தெரிவித்தார்.

அடுத்த மாதம் எட்டாந்

(6ஆம் பக்கம் பார்க்க)

யாழ். வின்ஸர் திரையரங் வார்கள்.

# நான்கு நாட்களின் பின் சடலம் அடையாளம் காட்டப்பட்டது

(விசேட நிருபர்)

கடந்த (23 - 5 - 90) புதன் கிழமை இரவு வீட்டைவிட்டு வெளிக்கிட்ட இளைஞன் நேற்று (26-8-90) பிணமாக மீட்கப்பட்டான்.

மருந்து எடுத்து வருவதாகப் புறப்பட்ட இளைஞன் வீடு திரும்பவில்லை. மாமனார் வீட்டில் தங்கும் பழக்கம் இருப்பதால் பெற்றோர் கவனம் எடுக்கவில்லை-

மாமனார் வீட்டில் இருந்து வந்தவர்கள் இரண்டு நாளாகக் குறிப்பிட்ட இளைஞர் ஏன் வரவில்லை எனக்கேட்ட பின்பே இளைஞனைத் தேடினர்.

இளைஞர் கடந்த புதனன்று இரவே வானால் மோதப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வான் - லொறி மோதல்

(விசேட நிருபர்)

நேற்று காலை 7 மணியளவில் யாழ்- மனோகராச் சந்தியில் நடைபெற்ற வான், லொறி மோதலில் எவருக்கும் சிறு காயம் கூட ஏற்படவில்லைஎனத் தெரிவிக்கப்படுகிறது.

வானின் முற்பகுதி பலத்த சேதத்திற்கு உள்ளாகியது. மோதுண்ட இரு வாகனங்களும் பல மணி நேரமாக அவ்விடத்திலேயே கிடக்கக்காணப்பட்டது. (21)

## ரயில்மீது கல்வீச்சு பலர் காயம்

(வவுனியா)

நேற்று முன்தினமிரவு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயில்மீது முறிகண்டியில் வைத்து இனந் தெரியாத நபர்கள் சிலரினால் சரமாரியாக கற்கள் வீசப்பட்டன.

ரயிலின் கண்ணாடிகள் உடைந்தமையினால் கற்கள் ரயிலின் உள்ளிருந்த பிரயாணிகள்மீது பட்டன. ரயில் பயணம் செய்த பிரயாணிக

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஆதம்பாவாவுக்கு அஞ்சலிக் கூட்டம்

(யாழ்நகர்)

அகால மரணம் அடைந்த கல்முனை சிற்றூர் அவைத் தலைவர் ஆதம்பாவா அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக மாபெரும் அனுதாபக் கூட்டம் இன்று மாலை 7.00 மணிக்கு யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்ணியினரால் நடாத்தப்படவுள்ளது.

இவ் அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பணிவான வேண்டுகோள்

(காத்தான்குடி)

கல்முனையில் உள்ள தீய சக்திகளான சில முஸ்லிம்கள் காத்தான்குடிக்குள் தொடர்ந்தும் குழப்பங்களை ஏற்படுத்தினால் இருபகுதியினரின் அமைதிக்கும் அது பங்கமாக அமையும் இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தொடர்பு உத்தியோகத்தர் ஜனாப் ஏ. எல். ஏ. குத்தூஸ் காத்தான்குடியின் அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தும் முஸ்லிம்களுக்கு பணிவான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

## பாடசாலைகளுக்கு ஜேர்மன் உதவி

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்குசில அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க ஜேர்மன் அரசு முன்வந்துள்ளது.

மலசலகூட வசதி, த்ண்ணீர் வசதி போன்றவற்றை மேற்படிபாடசாலைகளுக்குசெய்து கொடுக்க ஜேர்மன் அரசு இணக்கம் தெரிவித்திருப்பதாக வவுனியாகல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (தி)

## மின்தாக்கி விவசாயி மரணம்

(சம்மாந்துறை)

சட்டவிரோதமாக மின்சாரம் பெறவதற்கு வயல்வெளியூடாக பொருத்தப்பட்ட வயரில் சிக்கிய முஸ்லிம் விவசாயி ஒருவர் மின்தாக்கியதால் மரணமானார் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற நபர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

## வரிவிளம்பரம்

**தவறிவிட்டது**

க.பாலமுருகன் ஆகியஎனது அடையாள அட்டை இல. 690113189ட்றைவிங் சைசென்ஸ்இன்சூரன்ஸ் இல. 3F,15292 டயறி ஆகியன கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் இருந்து யாழ்ப் பாணம் வரும்போது தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் தயவுசெய்து ஒப்படைக்கவும்.
(R306)

## சேவை

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும் உங்கள் விருப்பமே எங்கள் சேவை பற்பல டிசைன்களில் பற்பல ரகங்கள் சாப்பாட்டுப் பீங்கான்கள் செற் சட்டிகள் தாச்சிச் சட்டிகள் றேகள்சோஸ்பான்கள் பொரியல் சட்டிசள் டின்னர் வெற்கள் ரீ செற்கள் கோவிற் சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம்

RAJZ BRAND பார்வை அறை S தேவதாசன் சூராவத்தை சுன்னாகம். B/ 270

## ஜனசக்தி கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு 4 ஆம் குறுக்குத்தெரு, 5ஆம் குறுக்குத்தெருக்கள், பிரதான வீதி, துண்டிபத்து வீடுகள் குடியேற்றத்திட்டம் உள்ளடக்கிய 'ஜனசக்தி' நிவாரணம்பெற்றுவரும் குடும்பத்தினர்களுக்கான விசேட கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு கொழும்புத்துறை துரையப்பா வித்தியாசாலையில் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு கே.சபாபதிப்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

கொழும்புத்துறை கிராம சேவை அலுவலர் திரு.எஸ். எம். டொமினிக், நெடுங்குளம் கிராம சேவை அலுவலர் திரு. கே. எஸ் இராசையா ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.
(24)


உங்கள் நினைவில் நின்றகலாத மங்கள வைபவங்கள்
கோயில் வைபவங்கள் எதுவானாலும்
பல பல டிஷைன்களில்

- சப்பறம்
- மணவறை
- பூந்தண்டிகை
- தகரப்பந்தல் சேவை
- பந்தல் சோடனை
- கதிரைகள்

என்பன வாடகைக்கு விடப்படும்.

உங்களது தேவை எங்கள் சேவை
என்றும் உங்களுக்காக சேவை நல்க
காத்திருக்கிறோம்.

**எஸ். எஸ். சர்மா**

முருகமூர்த்தி வீதி, சங்கானை.

**ஆண் உதவித் தாதியர் பயிற்சி நெறி**

**TRAINING FOR NURSES - AIDE (MALE)**

ஆண்களுக்கான உதவித் தாதியர் பயிற்சிநெறி
**10-06-1990** இல் ஆரம்பமாகவுள்ளன.

பதிவுகளுக்கு
Dr. V. P. சுந்தரராஜன்

**சாயி மெடிக்கல் அக்கடமி**

இல. 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(B.961)

**உங்கள் தேவைகளுக்கு ....**

- வீட்டுத்தீராந்திகள்
- றீப்பைகள்
- நிலைகள்
- கதவுகள்
- ஜன்னல்கள்
- கிறில்கட்டைகள்

ஓடர்களுக்குச் செய்து கொடுக்கப்படும்...

அரிவு வேலைகள் அனைத்தும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.
அனைத்து வீட்டுத் தளபாட ஓடர்களும் ஏற்றுக் கொள்ளப்படும்...

- மாம்பலகை
- பலாப்பலகை
- பிறவெட்டு
- களிம்புகள்

ஆகியவை பெற்றுக் கொள்ளலாம்.

உள்ளூர் மரங்கள் நிதான விலையில்
கொள்வனவு செய்யப்படும்.

**தினேஸ் மர அரிவு ஆலை**

சங்கானை வீதி (பொன்னாலை வீதி), மானிப்பாய்.
(Ъ/967)

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2-30.
6.30 & 9.30
CLINT EA TWOOD IN
HEART BREAK RIDGE
வெகுவிரையில்
ராஜா சின்ன ரோஜா

**வெலிங்டன் (யாழ்)**
ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30, 2-30, 6-30, 9-30
நிலவே மலரே
(புதிய பிரதி)
B/85 9

**ஹரன் - (யாழ்)**
தினசரி 4.00, 7.00, 9.30
விடுமுறை நாட்களில்
4 காட்சிகள்
ஜெய்சங்கர் K.R. விஜயா
அசோகன் நாகேஸ்
V. K. ராமசாமி
தேங்காய் சீனிவாசன்
சுருளிராஜன்
நடித்த
திருடி
B 878

**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.00, 6.30
7.00 9.00
சனி ஞாயிறுவிடுமுறை
நாட்களில்
10:30 2:30,: 4,00 6:00
7-30 9-00

**வின்ஸர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை
நாட்களில்
10.30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு


## நினைவு அஞ்சலிகள்.



வை அலுவலர் திரு.எஸ்.
. டொமினிக், நெடுங்கு
கிராம சேவை அலுவலர்
. கே. எஸ் இராசையா
யோர் சிறப்புரையாற்று
(24)


சங்கானை வீதி (பொன்னாலை வீதி), மானிப்பாய்.

(ꗃ/967)

அசோகன் நாகேஸ்
V. K. ராமசாமி
தேங்காய் சீனிவாசன்
சுருளிராஜன்
நடித்த
திருடி

B 878


## நினைவு அஞ்சலிகள்.



3 ஆம் வருடம் 6 ஆம் மாதம்

**செல்வன் தில்லை டொமினிக் சாந்தன்**
(லெப்ரினன்ட் கணேஷ்)

பிறப்பு 5. 8. 64 இறப்பு 21. 11. 86

செந்தமிழ் ஈழத்தின் தீரப் புதல்வா - கணேசா
தீந்தமிழன் விடுதலைக்காய் - நின் உயிரை
நீ துறந்து மூன்றாண்டுகள் சென்றபோது
வாடினோம், ஆனால் தயங்காமல்
தொடர்ந்தோம் உன் பாதையை - தன்
அண்ணா முடிக்கவில்லை முழுப் பணியை
நான் சென்று தொடர்வேன் - என்று

"சாந்தினேஸ்"

பளை.



6 ஆம் மாதம்

**செல்வன் தில்லை அன்ரன் தினேஸ்**
(2 ஆவது லெப்ரினன்ட் தினேஷ்)

பிறப்பு 13. 6. 69 இறப்பு 27. 11. 89

நிரந்தரமாய் இணைந்தான் உன் தம்பி தினேஸ்
வீறு கொண்ட வேங்கையாய் தலை நிமிர்ந்து
நீ நடந்தால் சொல்லாமல் கூறுவர்
தரணியிலே நீ தலைவர் பிரபாவின் வேங்கை என்று
மாவீரர் தினமன்று மாண்புடனே - நீ
மடிந்து சாற்றினாய் நீ வீர வேங்கை என்று
மறக்காமல் தொடர்வோம் உங்கள் பாதங்களை!

குடும்பத்தினர்,

இயக்க நண்பர்கள். (R.307)


**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.00, 6.30
7.00 9.00
சனி ஞாயிறுவிடுமுறை
நாட்களில்
10:30 2:30,: 4,00 6:00
7-30 9-00
பயங்கரச் சண்டைகள்
நிறைந்த படம்!!......
FISTFULL OF
DOLLERS:-
(Cinemascope)

**லிடோ (யாழ்)**
தினசரி 4-00, 6-45, 9-30
சனி, ஞாயிறு, விடுமுறை
நாட்களில்
10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, ரேவதி, சுரேஷ்,
மனோரமா, ஜெய்சங்கர்,
வை.ஜி. மகேந்திரன்
நடித்த
மருமகள்
அடுத்த வெளியீடு
மாவீரன்
(புதிய பிரதி)

**வின்ஸர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை
நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு
(புதிய வெளியீடு)

**ராஜா (யாழ்)**
தினசரி 4·45, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை
நாட்களில்
10·00, 2·00, 4·45,
7 00, 9·45
Terence Hill Bud Spence
I AM FOR THE
HIPPOPOTAMUS

**ஸ்ரீதர் - (யாழ்.)**
தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விசேஷ
விடுமுறை நாட்களில்
4 காட்சிகள்
10.30, 2.30, 6.30, 9.30
ரஜனி, ராதிகா, ரகுவரன்
நடித்த
ஊர்க்காவலன்
50-வது நாளை நோக்கி


## களுவாஞ்சிக்குடி ஆஸ்பத்திரி தரம் உயர்த்த கோரிக்கை

(களுவாஞ்சிக்குடி)

பட்டிருப்புத் தொகுதியின் மத்தியில் கேந்திர நிலையமாக விளங்கும் களுவாஞ்சிக்குடி அரசினர் வைத்தியசாலையில் பல பின் தங்கிய கிராமமக்கள் சிகிச்சை பெற்றுச் செல்கின்றார்கள்.

இங்கு போதிய வைத்திய உபகரணங்கள் இல்லாததால் நோயாளிகள் பல அசௌகரியங்களைஎதிர்நோக்கவேண்டியிருக்கின்றது. இவ் வைத்தியசாலைக்கு அவசியதேவையாக இருக்கின்ற 'ஜெனரேட்டர்' கூட இன்னும் கிடைக்கவில்லை.

இதனால் இங்கு அடிக்கடி ஏற்படும் மின்தடை காரணமாக மருந்துவகைகளை பாதுகாப்பாக பழுதடையாமல் வைப்பதற்குரிய ஒழுங்குகளையும் செய்ய முடியாதிருக்கின்றது. தங்கிச் சிகிச்சை பெற வேண்டிய நோயாளிகள் இடவசதியின்மையால் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

இரத்தவங்கி ஒன்று இங்கு ஏற்படுத்த வேண்டியதின் அவசியத்தை வைத்திய அதிகாரி வலியுறுத்தினார்.

கடந்த பல வருடங்களாக இவ் வைத்தியசாலையைத் தரம் உயர்த்த உரியமுறையில் அறிக்கைகள் தயாரித்துஅனுப்பியும் பல சமூகசேவை அமைப்புக்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு கோரிக்கை விடுத்தும் பலன் ஏதும் கிடைக்கவில்லையாம்.

ஆனால் அண்மையில் இதே தரத்தில் இயங்கிய சம்மாந்துறை அரசினர் வைத்தியசாலை ஜனாதிபதியின் விசேட பணிப்புரைகளுக்கமைவாக மாவட்ட வைத்தியசாலை தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டிருப்பதை இங்குள்ள பொது மக்களும், சமூக நிறுவனங்களும் சுட்டிக்காட்டுகின்றன

(4

# A/L பௌதிக இரசாயனம்
# வெப்ப இரசாயனம்

சத்தீஸ்

## அறிமுகம்

இயற்கையில் நாம் எதிர்கொள்ளும் பல்வேறு வகையான பதார்த்தங்களில் சம்பந்தப்படும் விசைகளையும், பிணைப்புகளையும் கருதும்போது நாம் கருத்திற்கொள்ள வேண்டிய மிக முக்கிய காரணி சக்தியாகும். சக்தி சம்பந்தப்பட்ட ஆய்வுகள் ''சக்தியியல்'' எனப்படும்.

**சக்தி:**

சக்தி என்பது வேலை செய்யும் ஆற்றல் அல்லது திறன் என வரையறுக்கப்படும்.

**சக்தியின் அலகுகள்:**

ஏக்கு, யூல், இலீற்றர் — வளிமண்டலம், கலோரி, இலத்திரன் உவோற், மெகா உவோற் என்பன ஆகும். ஆயினும் சர்வதேச அலகுமுறையில் சகலவகையான சக்திகளையும் குறிப்பிடுவதற்கு யூல் ( J ) என்னும் ஒரு அலகே பயன்படுத்தப்படும்.

**இரசாயனச் சக்தி:**

பதார்த்தத்தின் அமைப்பின் காரணமாக அப்பதார்த்தத்தில் பொதிந்துள்ள சக்தி ''இரசாயனச் சக்தி'' எனப்படும்.

ஒவ்வொரு பதார்த்தமும் அணுக்களாலும் மூலக்கூறுகளாலும் ஆக்கப்பட்டவையாகும். இவற்றுக்கிடையேயான இடைத்தாக்க வலுவிற்கேற்ப, பதார்த்தங்கள் மூலக்கூற்றுஇடையான ''இடைத்தாக்க சக்தியை'' கொண்டுள்ளன.

இச்சக்தி திண்மம், > திரவம் > வாயுவாகும். காரணம் மூலக்கூற்றிடைப் பிணைப்பு விசைகள் திண்மம் > திரவம் > வாயு ஆகும்.

வாயு] மூலக்கூறுகளிடையே மூலக்கூற்று இடைவிசைகள் குறைவாக இருப்பதால் இத்தகைய சக்தி வாயுநிலையில் உள்ள மூலக்கூறுகளுக்கு ஒரு முனைப்பான இயல்பு அல்ல.

மூலக்கூற்றிடைத் தாக்கச் சக்தியோடு, ஒரு குறிப்பிட்ட மூலக்கூறிலுள்ள அணுக்களிடையேயும் இடைத்தாக்கம் நிகழும். இதனால் ஏற்படும் சக்தி ''மூலக்கூற்றக இடைத்தாக்கச் சக்தி'' எனப்படும்.

மூலக்கூற்றிடை இடைத்தாக்க சக்தி மூலக்கூற்றக இடைத்தாக்கச் சக்தி என்பன இரண்டும் ஒரு குறிப்பிட்ட பதார்த்தத்தின் சிறப்பியல்பாகும். இவ்விரு சக்திகளும் ஒரு பதார்த்தத்தின் சக்தியில், இரசாயனச் சக்தியைப் பெருமளவில் ஆக்குகின்றன.

**வெப்ப இரசாயனம்:**

இரசாயனத் தாக்கங்கள்; தொகுப்புகளுடன் சம்பந்தப்படும் வெப்பமாற்றங்கள் பற்றிய ஆய்வு வெப்ப இரசாயனம் எனப்படும்.

## வெப்ப இரசாயனவியலின் "நியமநிலை"

தாக்க வெப்பங்களைக் கணிக்கும்போது அல்லது ஒப்பிடும்போது எல்லா நிலைமைகளிலும் தாக்கிகள், விளைவுகள் என்பன ஒரே தொடக்க முடிவு நிலைகளில் இருக்கவேண்டும். எனவே ஒரு தாக்கத்தின் வெப்ப மாற்றத்தை வசதியாகக் கூறுவதற்கு, சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சில நிபந்தனைகளை வரையறுப்பது அவசியமாகும். இவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் ''நியமநிலை'' எனப்படும்.

அதாவது வெப்பமாற்ற இயல்பு மாறாது இருப்பது ஒரே தொடக்க முடிவு நிபந்தனைகளைப் பேணுவதில் முக்கியமாகத் தங்கியுள்ளது. (முக்கியமாக அமுக்கம் வெப்பநிலை என்பன )

**சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகளாவன:**

a) அமுக்கம் 1,01325 atm $\simeq$ 1 atm
b) வெப்பநிலை 298° K ( 25° c )

குறிப்பு:

1) திண்ம திரவங்களில் 1 atm அமுக்கத்திலும் 25° c இலும் மிகவும் உறுதியான கா...

### பூமியின் வெப்பம் அதிகரிக்கும்

(நியூயோர்க்)

பூமியின் பருவநிலை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையின்படி கடந்த 10,000 ஆண்டுகளில் நிலவிய நிலையை விட அடுத்து வரும் பத்து ஆண்டுகளில் உலக வெப்பம் வெகுவாக அதிகரிக்கும் என்று தெரிய வருகிறது.

21 ஆம் நூற்றாண்டின் இறுதியில் பூமி வெப்பம் மூன்று பாகையால் அதிகரிக்கும் என்றும் கடல் மட்டம் 65 சென்ரி மீற்றரால் உயரும் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

இந்த மாற்றத்தில் இயற்கையின் பங்களிப்பு எவ்வளவு மனித முயற்சிகளின் பங்களிப்பு எவ்வளவு என்று மிகத் தெளிவாகத் தெரியவில்லை என்று ஐக்கிய நாடுகள் சபையின் சார்பில் இந்த ஆய்வில் ஈடுபட்ட விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

# ஜம்முகாஷ்மீர் ஆளுநர் ஜக்மோகன் ராஜினாமா!

## புதிய ஆளுநராக சக்சேனா நியமனம்; பாரதிய ஜனதா தலைவர் அதிருப்தி!

(டில்லி)

இந்தியாவின் ஜம்முகாஷ்மீர் ஆளுநர் ஜக்மோகன் பதவியை ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த திரு. சக்சேன புதிய ஆளுநராகப் பதவியேற்றார். இவர் பிரதமர் சிங்கிற்கு காஷ்மீர் பஞ்சாப் விவகாரங்களில் ஆலோசகராக இருந்தவர்.

மௌலவி பாரூக் கொலையைத் தொடர்ந்து ஏற்பட்ட உயிர்க் கொலைகளுக்கு ஜக்மோகனே பொறுப்பு என்று குற்றஞ்சாட்டி இவரைப்பதவி விலக்கும்படி எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தை வற்புறுத்தியிருந்தன.

இதனையொட்டி இந்திய அரசாங்கம் இவரை பதவி விலகும்படி கேட்டிருந்தது. இதனால் ஆளுநர் ஜக்மோகன் பதவியை ராஜினாமாச் செய்ய நேர்ந்தது.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் நிலவும் கடுமையான போக்கிற்கும், அங்கு நிலவும் நடவடிக்கைகளுக்கும் ஜக்மோகனே காரணமெனஎதிர்க் கட்சிகளும், ஜம்மு காஷ்மீர் மக்களும் கருதிவந்தனர்.

இவர் இந்த வருடம் ஜனவரியில் பதவியேற்றிருந்தார். இவர் பதவியேற்றதன் பின்னரே இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று சோதனையிடத் தொடங்கினர்.

அத்துடன் இராணுவத்தினரின் ரோந்துப் பணிகளும், ஊரடங்குச் சட்டமும் அதிக அளவில் ஏற்பட்டன.

இதன் காரணமாக இவர் பதவியேற்ற நாள்முதலே இவரை பதவியிலிருந்து விலக்கும்படி மத்தியஅரசை ஏனைய கட்சிகள் கேட்டு வந்தன.

ஆனால் அதேவேளை இந்துக்கள் அதிகமாக வாழும் ஜம்முவில் வேலைநிறுத்தம் நடைபெறுகின்றது.

இங்கு வாழும் இந்துக்கள் ஜக்மோகன் பதவிநீக்கம்செய்ததைக் கண்டித்து தமது வேலைகளை பகிஷ்கரித்தனர்.

ஆளுநர் பதவியிலிருந்து ஜக்மோகனை விலகச் செய்ததை பாரதீய ஜனதா கட்சித் தலைவர் எல். கே. அத்வானி அதிருப்தி தெரிவித்தார்.

ஜக்மோகன் பதவிவிலகியது காஷ்மீர் குழப்பக்காரர்களுக்கும் பாகிஸ்தானுக்கும் வாய்ப்பாகிவிடும் என்று அத்வானி தெரிவித்தார்.

# ஐ.நா. கண்காணிப்புக் குழுவை ஆக்கிரமிப்பு பகுதிக்கு அனுப்பவும்

(ஜெனீவா)

பலஸ்தீன விடுதலை அமைப்பின் தலைவர் யாசீர் அரபாத் ஆக்கிரமிப்புப் பகுதிகளில் மக்களைஅழித்தொழிக்கும் முயற்சியை இஸ்ரேல் தொடக்கி உள்ளதாக குற்றஞ்சாட்டி இருக்கிறார்.

இஸ்ரேல் ஆக்கிரமிப்புப் பகுதியில் இறங்கியுள்ள வன்செயல்கள் தொடர்பாக, ஜெனிவாவில் கூட்டப்பட்ட ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் சிறப்புக்கூட்டத்தில் அரபாத் கண்டனம் தெரிவித்தார்.

இஸ்ரேலின் இராணுவநடவடிக்கையை கண் காணிக்க ஐ.நாவின் அரசியல் கண்காணிப்புக்குழு ஒன்று விரைவாக அங்கு அனுப்பப்பட வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள்விடுத்தார்.

ஆனால் இக் கூட்டம் தொடங்கு முன்பாக இஸ்ரேல் கண்காணிப்பு குழு எதையும் தாம் அனுமதிக்க போவதில்லை என அறிவித்தது.

## கிராமிய கலைவிழா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட கிராமிய கலைவிழா எதிர் வரும் ஜூன் மாதம் 16 ஆம் திகதி நகரமண்டபத்தில் நடைபெறும்.

கிராமிய கலைகளுக்கு புத்துயிர் அளிப்பதற்காக மாவட்ட கலாசார பேரவையினால் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (37)

## திறந்த பல்கலைக்கழக மாணவர்அவைத்தேர்தல்

(அராலி)

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் மாணவர் அவைக்கான தேர்தலில் யாழ் பிராந்திய நிலையம் ஊடாக போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அவசர ஆலோசனைக்கூட்டம் இன்று 27 ஆம் திகதி ஞாயிறன்று நண்பகல் பன்னிரண்டு மணியளவில் பிறவுண்வீதியில் அமைந்துள்ள யாழ் பிராந்திய நிலையத்தில் நடைபெறுகின்றது.

எதிர் வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும் மேற்படி தேர்தல்கள் ஜூன் இருபத்தி மூன்றாம்திகதி முடிவுறவுள்ளது.

மேற்படி தேர்தல்கள் அனைத்து இலங்கை ரீதியில் நடை பெறுகின்றன. மிகவும் குறைந்த எண்ணிக்கையான தமிழ் வேட்பாளர்களே தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

அவர்களுள் கூடுதலானவர்கள் யாழ் நிலையத்திலிருந்து போட்டியிடுகின்றனர்.

# கொர்பச்சேவுக்கு சம்பள உயர்வு

(மாஸ்கோ)

புதிய பிரமாணங்களுக்கமைய சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவுக்குச் சம்பள உயர்வுடன் மாஸ்கோவில், கிறிமியாவிலும் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களும் வழங்கப்பட்டுள்ளன.

சோவியத் பாராளுமன்றம் ... சேவின் மாதச் சம்பளம் ரூபா 1,47, 200 ஆகும்.

கொர்பச்சேவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் கே. ஜி.பி என்ற ரஷ்ய துப்பறியும் பிரிவின் பாதுகாப்போடு கார்களும், ஹெலிகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

கொர்பர்சோவின் முன்...

## பரு. வைத்தியசாலைக்கு நிர்வாக உத்தியோகத்தர்

(பருத்தித்துறை)

... அப்புறப்படுத்தல் ஆகியவற்...

தாக்க வெப்பங்களைக் கணிக்கும்போது அல்லது ஒப்பிடும்போது எல்லா நிலைமைகளிலும் தாக்கிகள், விளைவுகள் என்பன ஒரே தொடக்க முடிவு நிலைகளில் இருக்கவேண்டும். எனவே ஒரு தாக்கத்தின் வெப்ப மாற்றத்தை வசதியாகக் கூறுவதற்கு, சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சில நிபந்தனைகளை வரையறுப்பது அவசியமாகும். இவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் ''நியமநிலை'' எனப்படும்.

அதாவது வெப்பமாற்ற இயல்பு மாறாது இருப்பது ஒரே தொடக்க முடிவு நிபந்தனைகளைப் பேணுவதில் முக்கியமாகத் தங்கியுள்ளது. (முக்கியமாக அமுக்கம் வெப்பநிலை என்பன)

**சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகளாவன:**

a) அமுக்கம் 1,01325 atm $\simeq$ 1 atm
b) வெப்பநிலை 298° K ( 25° c )

குறிப்பு:

1) திண்ம திரவங்களில் 1 atm அமுக்கத்திலும் 25° c இலும் மிகவும் உறுதியான தூய பதார்த்தத்தைக் கருத வேண்டும்.

2) வாயுக்களைக் கருதும்போது அமுக்கம் பூச்சியமாக இருக்கவேண்டும். காரணம் பூச்சிய அமுக்கத்திலேயே வாயுவின் இலட்சியப்பண்பு உயர்வாக இருக்கும். ஆனபோதிலும் செய்முறைகளில் வாயு, ஆவி என்பவற்றுக்கும் நியமநிலை 1 atm ஆகவே பொருத்தமான வெப்பநிலையில் ( 25° C ) எடுக்கப்படும்

**உள்ளீட்டுச்சக்தி:**

ஒரு சேர்வையின் இரசாயனச் சக்திக்கும் அச்சேர்வையில் உள்ள தனி மூலகங்களின் மொத்தக் கூட்டுச் சக்திக்கும் இடையே உள்ள வித்தியாசம் உள்ளீட்டுச் சக்தி எனப்படும்.

அதாவது ஒரு குறித்த நிலையில் உள்ள பதார்த்தம் ஒன்று கொண்டுள்ள சக்தி கொள்ளளவும் ஆகும். ஒரு சேர்வைக்கும்– அதன் மூலகங்களுக்கும் சக்திக் கொள்ளளவத்தில் உள்ள வித்தியாசம் உள்ளீட்டுச் சக்தி எனப்படும்.

குறிப்பு:

1) உட்சக்தியின் நியம அளவுகோல் பூச்சியமாகும். நியம அளவுகோல் மட்ட உட்சக்தியைக் கொண்ட பதார்த்தங்கள் (பூச்சியச் சக்தி மட்டம் உள்ளவை) தரை நிலையில் உள்ள மூலகங்களும் மூலக்கூறுகளும் ஆகும். அதாவது தனி மூலகங்களின் உள்ளீட்டுச் சக்தி பூச்சியம் எனக் கருதப்படும்.
2) பூச்சிய மட்டத்தினை விடக் குறைவான சக்தியைக் கொண்டவை (–) எதிர் உட்சக்தியைக் கொண்டிருக்கும்.
3) பூச்சிய மட்டத்தினை விட உயர்வான சக்தியைக் கொண்டவை நேர் (+) உட்சக்தியைக் கொண்டிருக்கும்.
4) ஒரு சேர்வையின் உட்சக்தி = தோன்றல் வெப்பமாகும்.

**வெப்ப உள்ளுறை (H)**

மாறா அமுக்கத்தில் நிகழும் ஓர் இரசாயனத் தாக்கத்துடன் சம்பந்தப்பட்ட வெப்பச் சக்தி மாற்றத்தை அத்தொகுதியின் குறித்த ஓர் இயல்பில் ஏற்படும் நிகரொத்த மாற்றமாக இனம் காணலாம். இவ்வியல்பு ''வெப்பவுள்ளுறை'' எனப்படும்.

**வெப்ப உள்ளுறை மாற்றம் ($\Delta$H)**

ஒரு இரசாயனத் தாக்கத்தில் தாக்கிகள் விளைவுகளாக மாற்றப்படும்போது ஏற்படும் விளைவுச் சக்தி மாற்றமாகும். அதாவது விளைவுகளின் வெப்பவுள்ளுறைக்கும், தாக்கிகளின் வெப்பவுள்ளுறைக்கும் இடையேயுள்ள வேறுபாடு ஆகும். இது நியமநிலையில் கூறப்படின் ''நியம வெப்பவுள்ளுறை மாற்றம்'' எனப்படும்.

$$\Delta H = H_2 - H_1$$

$H_2$ — விளைவுகளின் வெப்ப உள்ளுறை
$H_1$ — தாக்கிகளின் வெப்ப உள்ளுறை

குறிப்பு:

ஒரு வெப்பவுள்ளுறை மாற்றத்தைக் குறிக்கும் போது அல்லது ஒப்பிடும்போது பின்வருவன முக்கியமாகக் கூறப்படவேண்டும்.

1) சம்பந்தப்பட்ட பதார்த்தத்தின் அளவு
2) அளவீடுகள் பெறப்பட்ட நிபந்தனைகள்

(தொடரும்)

இலங்கைத் திறந்த [illegible] லைக் கழகத்தின் மாணவர் அவைக்கான தேர்தலில் யாழ் பிராந்திய நிலையம் ஊடாக போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அவசர ஆலோசனைக்கூட்டம் இன்று 27 ஆம் திகதி ஞாயிறன்று நண்பகல் பன்னிரண்டு மணியளவில் பிறவுண்வீதியில் அமைந்துள்ள யாழ் பிராந்திய நிலையத்தில் நடைபெறுகின்றது.

எதிர் வரும் ஜூன் மாதம் [illegible] இருபத்தி மூன்றாம்திகதி முடிவுறவுள்ளது.

மேற்படி தேர்தல்கள் அனைத்து இலங்கை ரீதியில் நடை பெறுகின்றன. மிகவும் குறைந்த எண்ணிக்கையான தமிழ் வேட்பாளர்களே தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

அவர்களுள் கூடுதலானவர்கள் யாழ் நிலையத்திலிருந்து போட்டியிடுகின்றனர்.

[illegible] வையினால் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (37)

[illegible] பாகிவிடும் என்று அத்வானி தெரிவித்தார்.

# பரு. வைத்தியசாலைக்கு நிர்வாக உத்தியோகத்தர்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலைக்கு நிர்வாக உத்தியோகத்தர்(செயலாளர்) ஒருவரை நியமிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கேட்கப்பட்டுள்ளாரென யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலை அபிவிருத்திச் சபைக்கு அறிவித்துள்ளார்.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலை அபிவிருத்திச்சபை, சுகாதார சேவைகள் அபிவிருத்திச் சபை மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத்தைச் சந்தித்த போது அமைச்சர் யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் திரு. என்.கனகசபைக்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி உத்தரவிட்டிருந்தார். அமைச்சரின் உத்தரவுகள் பற்றி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியசாலை அபிவிருத்திச்சபைக்கு அறிவித்துள்ளார். அவ்வறிவித்தலில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது

பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலையில் விசேட கிளினிக்கை நடத்துவதற்கு விசேட வைத்திய நிபுணர் டாக்டர் ஆனந்த ராஜாவை விடுவிக்குமாறு யாழ். போதனா வைத்திய சாலை பணிப்பாளர் கோரப் பட்டுள்ளார். வருடாந்த இடமாற்றத்தால் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்கு மாற்றம் பெற்றுள்ள டாக்டர் எஸ்.மங்களேஸ்வரனை விடுவிக்குமாறும் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் கேட்கப்பட்டுள்ளார். அத்துடன் யாழ். போதனாவைத்தியசாலையில் கடமை புரியும் பௌதீகவியல் சிகிச்சையாளர் திரு. செல்லையாவை பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்கு விஜயம் மேற்கொள்ள விடுவிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வைத்திய சாலையில் தண்ணீர் விநியோகம் கழிவு நீர் அப்புறப்படுத்தல் ஆகியவற்றில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்ய 75,000 ரூபா மதிப்பீடு செய்யப்பட்டு திருத்த வேலைகள் கட்டிடத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப் படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன. இவ்வேலைகளுக்குப் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் உள்ள நிதியைப் பயன்படுத்துவதற்கும் யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

# கொர்பச்சேவுக்கு சம்பள உயர்வு

(மாஸ்கோ)

புதிய பிரமாணங்களுக்கமைய சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவுக்குச் சம்பள உயர்வுடன் மாஸ்கோவில்,கிறிமியாவிலும் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களும் வழங்கப் பட்டுள்ளன.

சோவியத் பாராளுமன்றம் ஜனாதிபதிக்குமாதாந்தமொத்தச் சம்பளமாக 4,000ரூபிள்ஸ் 6 400 டொலர், வழங்க அனுமதித்திருப்பதோடு, சர்வதேச தரத்துக்கமைய உபசரிப்புச் செலவுக்கும் படியைப் புறம்பாக ஒதுக்கியுள்ளது.

ஜனாதிபதியின் சம்பளத்தில் வரிகள் நீங்கலாக நாணய மாற்று வீதத்தின்படி 3,680 அமெரிக்கா டொலர்கள் மதிப்புள்ள பணம் மாதச் சம்பளமாகக் கிடைக்கிறது. இலங்கைப் பணத்திலும் கொர்பச்சேவின் மாதச் சம்பளம் ரூபா 1,47, 200 ஆகும்.

கொர்பச்சேவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் கே. ஜி.பி என்ற ரஷ்ய துப்பறியும் பிரிவின் பாதுகாப்போடு கார்களும், ஹெலிகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

கொர்பர்சோவின் முன்னைய மாதாந்தச் சம்பளம் 1.500 ரூபிள்ஸ்களாகும். மேலதிக பணத் தேவைகள் தனிப்பட்ட முறையில் ஒழுங்கு செய்யப்பட்டன.

ஆனால், ஜனாதிபதியின் இன்றைய சம்பளத்திட்டம் பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட சட்டபூர்வமான கொடுப்பனவு என்றும், இரகசிய பணிப்புரைகளின் பேரில் ஒழுங்கு செய்யப்பட்டதல்ல என்றும் டாஸ் செய்தி ஸ்தாபனம் குறிப்பிடுகிறது.


## COMPUTER PROGRAMMING COURSES

| | Commencement | Days | Time |
|---|---|---|---|
| **BASIC** (Week- end Batch) | 26- 05- 90 | Sat.<br>Sun. | 8. 30—10. 30<br>1. 30—3. 30 |
| **BASIC** (Week Day Batch) | 05- 06- 90 | Tue.<br>Thu. | 10.30—12. 30<br>10.30—12. 30 |
| **LOTUS I, 2, 3** | 28. 05. 90 | Mon.<br>Wed. | 10.30—12.30<br>10.30—12.30 |
| **d. BASE III+** | 29. 05. 90 | Tue.<br>Thu. | 10.30—12.30<br>10,30—12.30 |
| **WORD PROCESSING** | 30. 05. 90 | Wed.<br>Fri. | 8.30—10.30<br>8.30—10.30 |

★ Lectures by Members of the Institute of Data Processing Management (London) ★ More hours of Practicals ★ Attractive fees ★ Fees in Instalments ★ Explanations in Tamil ★ Valuable certificate

**NOTE: Personal Classes for Professionals.**

C. I. M. A, I. D. P. M, A. A. T, I. A. B.
Classes are Commencing on 02- 06- 90

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

(Leaders in Computer Education)
16, 3rd Cross Street, JAFFNA.

(C/4582)

# விவசாயிகளுக்கு ஓர் நற்செய்தி!

FINCHEM AGRO DIVISION

மேற்கு ஜெர்மனியின்
BASF நிறுவனத்தினரின்
**விவசாய இரசாயனங்கள்**
தற்போது வடபகுதியெங்கும்
அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**BASF**

வெங்காய பயிரைத் தாக்கும் நுனி கருகல், தண்டு வெளிறல் ஊதா கொப்புளநோய், தண்டு அழுகல் போன்ற நோய்களை முற்றிலும் கட்டுப்படுத்த

**BASF இன் பொலிராம் M பாவியுங்கள்.**

தற்பொழுது வெங்காய செய்கையாளர்களால் விரும்பி
பாவிக்கப்படும் ஓர் பூச்சிநாசினி

## பேர்fவெக்தியோன்

வெங்காயச் செய்கையில் செலவைக் குறைத்து விளைச்சலை அதிகரிக்க
பேர்fவெக்தியோன் பூச்சிநாசினியை உபயோகியுங்கள்.

BASF உற்பத்திகளை "பின்கெம்" (FINCHEM) வழங்குகின்றது.
சகல விவசாய இரசாயன வியாபாரிகளிடமும் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

## பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரைவேட்) லிமிட்டெட்,

186, வக்சோல் வீதி, கொழும்பு - 2

(பீடை நாசினிகள் அபாயகரமானவை. அவதானமாகப்பாவியுங்கள்) B-1019


## வடமராட்சியில் கால்நடை அபிவிருத்தி நடவடிக்கை

(பருத்தித்துறை)

வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் வடமராட்சிப் பகுதியில் கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான துரித முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

யாழ். மாவட்ட திட்டமிடல் பகுதியால் வடமராட்சி கால்நடை வளர்ப்போர் சங்கத்திற்கு சர்வதேச அபிவிருத்தி நிதியக் கடனுதவித் திட்டத்திலிருந்து 1,00,000 (ஒருலட்சம்) ரூபா நிதி வழங்கியதை அடுத்தே இந்நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

சங்கத்தால் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்களுக்கு கோழி வளர்ப்பதற்கு முதல் கட்டமாக 2,000ரூபா வழங்கப்படவுள்ளது. இப்பணத்தை புலோலி ப. நோ. கூ. சங்கக் கிராமியவங்கி முகாமையாளர் அங்கத்தவர்களின் சேமிப்புக் கணக்குப் புத்தகத்திலிட்டு வழங்குவார்.

கோழிக்கூடு அமைப்பதற்கே இம் முதற்கட்ட பண உதவி வழங்கப்படுகின்றது. கிளைத் தலைவர், செயலாளர், கால்நடை அபிவிருத்தி தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோர் கோழிக்கூடு அமைக்கப்பட்டதாகச் சான்றிதழ் வழங்குமிடத்து இரண்டாம் கட்ட நிதி உதவியாகிய 1,500 ரூபா கோழிக்குஞ்சு 40 தீனி உபகரணங்கள் கொள்வனவு செய்ய வழங்கப்படும். மேற்கூறப்பட்ட மூவரும் கோழிக்குஞ்சுகள், உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்ற சான்றிதழ் வழங்கியதும் மிகுதி 1,500 ரூபாவும் வழங்கப்படும்.

கடன்பெற்று 6ஆம் மாதம் தொடக்கம் மாதாந்தம் 4% வட்டியும் முதலும் என்ற ரீதியில் 48மாதத்திற்குள் புலோலி கிராமியவங்கியிலுள்ள சங்கச் சேமிப்புக்கணக்குஇல6147இல் பணத்தைக்கட்ட ஒப்புக் கொள்ளவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

மட்டக்களப்பு

## மாநகரசபைப் பகுதிக்குள் குப்பையகற்ற நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குள் அமைந்திருக்கும் தெருக்களில் பொதுவாக இரு பக்கங்களிலும் குப்பைகள் தேங்கிக்கிடப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்தில் உழவு இயந்திரங்கள் பற்றாக்குறையே இதற்குக் காரணமாகும். மேலும் இச்சேவையின் பொருட்டு வாடகைக்கு அமர்த்துவதற்கு பதினைந்தாயிரம் ரூபா செலவாகிறது.

எனவே வரி இறுப்பாளர்கள் அனைவரும் மாநகரசபை நிர்வாகத்துடன் ஒத்துழைக்க வேண்டுமென மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர் திரு. க. கார்த்திகேசு தெரிவித்துள்ளார்.

மக்கள் பின்வரும் சில விதிகளைக் கடைப்பிடித்தால் குப்பைகள் தேங்கிக்கிடப்பதை தவிர்க்கமுடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். தெருவில் குப்பைகளைக் கொட்டுதல் கூடாது, குப்பைகளை ஒரு பைக்குள் வைத்துஇருத்தல் வேண்டும், வீடு உடைத்த பொருட்கள், கற்கள், மரத்துண்டுகள் போன்ற பொருட்களை வீதிகளில் போடுதல் கூடாது. அவ்வாறு போட்டால் இவற்றை அகற்றும் சந்தர்ப்பத்தில் இதற்குப் பொறுப்பான கட்டணம் அறவிடப்படும். தெரு சுத்திகரிப்பு ஊழியர்கள் கடமையில் ஈடுபடும்போது சேகரித்த குப்பைகளைஅவர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும் என்றார்.

## பரிசோதனைக்கு மீன்கள் கொழும்பிற்கு

(தம்புலுவில்)

திருக்கோயில் பகுதியைச் சேர்ந்த சில களப்புகளில் பிடிக்கப்பட்ட மீன்களில் புழுக்கள் இருப்பது பற்றிய பரிசோதனைக்காக சுகாதாரப் பகுதியினரால் நேரடியாகக் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டன. மட்டக்களப்பில் பிடிக்கப்படும் மீன்களில் புழுக்கள் காணப்படுவதாக சமீபகாலங்களில் பேசப்படுவது தெரிந்ததே.

பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ்
(பிரைவேட்) லிமிட்டெட்,

186, வக்சோல் வீதி, கொழும்பு - 2

(பீடை நாசினிகள் அபாயகரமானவை. அவதானமாகப்பாவியுங்கள்)

B-1019


அனைவரும் மாநகரசபை நிர்வாகத்துடன் ஒத்துழைக்க வேண்டுமென மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர் திரு. க.கார்த்திகேசு தெரிவித்துள்ளார்.

மக்கள் பின்வரும் சில விதிகளைக் கடைப்பிடித்தால் குப்பைகள் தேங்கிக்கிடப்பதை தவிர்க்கமுடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். தெருவில் குப்பைகளைக் கொட்டுதல் கூடாது, குப்பைகளை ஒரு பைக்குள் வைத்துஇருத்தல் வேண்டும், வீடு உடைத்த

## கொழும்பிற்கு

(தம்புலுவில்'

திருக்கோயில் பகுதியைச் சேர்ந்த சில களப்புகளில் பிடிக்கப்பட்ட மீன்களில் புழுக்கள் இருப்பது பற்றிய பரிசோதனைக்காக சுகாதாரப் பகுதியினரால் நேரடியாகக் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டன. மட்டக்களப்பில் பிடிக்கப்படும் மீன்களில் புழுக்கள் காணப்படுவதாக சமீபகாலங்களில் பேசப்படுவது தெரிந்ததே.


உங்கள் உணவு தரமானதாக இருக்க.....

நாம் வழங்கும் அரிசி வகைகளுக்கு உத்தரவாதம் அளிக்கின்றோம்

உயர்தரமான குத்தரிசி, தவிடு
வகைகளுக்கு
எம்மை அணுகுங்கள்!

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

ஓம்

நாகபூசனி அரிசி ஆலை

NAGAPOOSANY MILL

சண்டிலிப்பாய். உரிமையாளர்: G. SHANMUGANANTHAN.

(B.965)

### சிந்தனைக்கு

அபாயம் எதுவுமின்றி மகத்தானது எதுவும் எப்பொழுதும் சாதிக்கப்பட்டதில்லை.

- மாக்கியவெல்லி

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 27 - 05 - 90

தொலைபேசி

ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208

த. பெ. எண். 05

# வெளிநாட்டு ராஜதந்திரிகள் படையெடுப்பு

கொழும்பிலுள்ள மேல்நாட்டுத் தூதுவர்களும் தூதரகங்களைச் சேர்ந்த ராஜதந்திரிகளும் சென்ற சில தினங்களாக யாழ்ப்பாணத்துக்குப் படையெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளின் அலுவலகத்துக்குச் சென்று அரசியல் நிலைபற்றி ஆலோசனை செய்கிறார்கள். தமிழீழத்தின் உண்மை நிலையை நேரில் அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுகிறார்கள்.

பிரேமதாசா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் நல்ல முறையில் நிறைவேறி நாட்டில் நிரந்தர அமைதி ஏற்படுமா, அல்லது மீண்டும் இலங்கை அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மோதல் ஏற்படுமா என்பதைத் தெரிந்து கொள்வதில் அக்கறை காட்டுகிறார்கள்.

கடந்த ஏழு எட்டு வருடங்களாக யாழ்ப்பாணத்துக்கு வெளிநாட்டுத் தூதர்களோ, தூதரக அதிகாரிகளோ சுதந்திரமாக வந்து செல்ல முடியாதிருந்தது.

1987 ஆம் ஆண்டில் அமைதிப்படை என்ற பெயரில் இந்திய இராணுவம் வடக்குக் கிழக்கில் வந்து குடிகொண்டபின் இந்தியத் தூதரக அதிகாரிகளும் இந்தியத் தூதுவரையும் தவிர வேறு எவரும் இங்கு வருவதற்கு அனுமதிக்கப்படவில்லை.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளோ சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகளோகூட இப்பகுதிக்கு வரமுடியாதிருந்தது. இந்தியப் பத்திரிகையாளர்களிலும் தாங்கள் கூட்டி வந்தவர்களைத் தவிர வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களோ உள்நாட்டுப் பத்திரிகையாளர்களோ சுதந்திரமாக தமிழ்ப் பகுதிகளுக்கு வந்து செல்ல முடியாதிருந்தது.

இந்தியப்படையின் பாதுகாப்புடன் அமைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண சபையின் ஆட்சி இங்கிருந்தபோதுகூட வெளிநாட்டு ராஜதந்திரிகள் இவ்வளவு சுதந்திரமாகத் தமிழ்ப் பகுதிக்கு வந்து உண்மை நிலையை நேரில் அறிந்து செல்ல முடியாதிருந்தது.

வெளிநாடுகளும் வெளிநாட்டு நிறுவனங்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கென வழங்கிய உதவிகள் உண்மையிலேயே அந்த மக்களுக்குப் போய்ச்சேர்ந்தனவா, தாம் கொடுத்த உதவிகள் எப்படிப் பயன்படுத்தப்பட்டன என்பதைக்கூட அவர்கள் அறிந்து கொள்ள முடியாதிருந்தனர்.

# முஸ்லிம் மக்களின் இறைமையும் தமிழீழ விடுதலைப் போராட்டமும்

## (2)

பொருளாதார ரீதியில் முஸ்லிம்களைப் பின்தள்ளச் செய்யும் நடவடிக்கைகளும் திட்டமிட்டு மேற்கொள்ளப் பட்டுள்ளன. கல்லோயா - சேனநாயக்கா சமுத்திரம், அம்பலம் - ஓயாக்குளம் ஆகிய பகுதிகளில் நீண்டகாலமாக மீன்பிடித்து வந்த முஸ்லிம்கள் அரச அனுசரணையுடன் விரட்டப்பட்டனர். இதேபோல் நாவலடி (மூதூர்) குச்சவெளி போன்ற பகுதிகளிலும் முஸ்லிம் மீனவர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். புத்தளத்தில் காலா காலமாக பேரூந்து நிலையத்தில் வியாபாரம் செய்துவந்த முஸ்லிம்மக்களின் பொருளாதாரத்தை நாசம் செய்ய நகருக்கு வெளியே புதிய பேரூந்து நிலையத்தை நிறுவி, புதிய கடைகளையும் அமைத்து அவற்றைச் சிங்களவர்களுக்குக் கொடுத்தது ஸ்ரீலங்கா அரசு.

முஸ்லிம் மக்களின் மத, கலாசாரத் தனித்துவங்களைப் பேணுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாகப் பெயரளவில் கூறிக்கொண்டபோதும், நடைமுறையில் முஸ்லிம் மக்களின் தனித்துவமான மத, கலாசார அடையாளங்களை அழித்தொழிக்கும் வேலைகள் அரச ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

மேற்கூறிய ஒடுக்குமுறைகள் முஸ்லிம் மக்கள் ஸ்ரீலங்கா அரசுகள் மீது நம்பிக்கை இழப்பதற்கும், சிங்கள இனவாதத்தின் கொடூரத்தன்த்தைப் புரிந்துகொள்வதற்கும் அடிப்படையாய் அமைந்தன.

இந்நிலையில் சகல ஒடுக்குமுறைகளையும் உடைத்தெறிந்து ஒரு சமதர்ம அரசினை உருவாக்கும் நோக்கினைத் தன்னகத்தே கொண்ட தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் தம்மை இணைத்துக் கொள்ளவேண்டிய தேவையினை முஸ்லிம் மக்கள் உணரத் தலைப்பட்டனர். ஆனால் முஸ்லிம் மக்களைப் போராட்டத்துடன் இணையவிடாமல் தடுப்பதற்கு ஸ்ரீலங்கா அரசு பல சதித்தனங்களைச் செய்து வந்தது. ஸ்ரீலங்கா அரசின் இந்தச் சதித்தனங்களுக்குப் பொறுப்பற்றவிதத்திலும் கட்டுப்பாடற்ற முறையிலும் நடந்துகொண்ட சில தமிழ் அமைப்புக்களின் (பின்னர் இந்தியக் கைக்கூலிகளாக இயங்கியவர்கள்) முஸ்லிம் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளும் துணைபுரிவதாக அமைந்தன. சூழ்நிலைகளைப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா அரசு இஸ்ரேலிய மொஸாட்டின் துணையுடன் 1985ஆம் ஆண்டு தமிழ், முஸ்லிம் கலவரத்தை ஏற்படுத்தியது. இக்கலவரம் முஸ்லிம் மக்கள் மத்தியில் ஒரு வடுவினை ஏற்படுத்தியதுடன், தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் இணைவது குறித்து ஒரு சந்தேக நிலையினையும் தோற்றுவித்தது என்பதை நாம் வேதனையுடன் ஒப்புக்கொண்டேயாக வேண்டும். எனினும் பல முஸ்லிம் முற்போக்குச் சக்திகள் இக்கலவரத்தின் பின்னாலுள்ள ஸ்ரீலங்கா அரசினதும், இஸ்ரேலிய மொஸாட்டினதும் சதித்தனங்களை வெளிப்படுத்தியதுடன் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்துடன் முஸ்லிம் மக்கள் இணையவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தியிருந்தன.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வாழும் முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களைப் போல வடக்குக் கிழக்குப் பகுதிகளை தமது பாரம்பரியத் தாயகமாகக் கொண்டு, பொதுப் பொருளாதார வாழ்வைக் கைக்கொண்டு வாழ்ந்து வருபவர்கள். தமிழ் - முஸ்லிம் மக்களின் அன்றாடப் பொருளாதார வாழ்வின் இணைப்புப் பாலமாகத் தமிழ் மொழியே விளங்குகின்றது. தமிழ் மக்கள் எதிர் நோக்குவது போன்ற சகல ஒடுக்குமுறைகளையும் முஸ்லிம் மக்களும் எதிர்நோக்குகின்றனர். இந்நிலையில் தமிழ் - முஸ்லிம் மக்கள் இணைந்து தங்கள் உரிமைக்காகப் போராடுவது தவிர்க்க முடியாத வரலாற்றுத் தேவையாகின்றது.

கடந்த காலங்களில் முஸ்லிம் மக்களை இணைத்துக் கொள்வதில் தமிழ்த் தலைமைகள் வெற்றியடையவில்லை. 1915 ஆம் ஆண்டு சிங்கள முஸ்லிம் இனக்கலவரத்தின் போது கைது செய்யப்பட்ட சிங்களத் தலைவர்களை விடுதலை செய்ய சேர். பொன். இராமநாதன் செயற்பட்டதன் மூலம் சிங்களச் சார்பு நிலைப்பாட்டினை எடுத்தமை முஸ்லிம் மக்களுக்குத் தமிழ்த்தலைமைகள் மீது சந்தேகம் ஏற்படுவதற்கு வழி சமைத்தது எனலாம். இதன் பின்னர் வந்த தமிழ்த் தலைமைகள் முஸ்லிம் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தக்கூடிய வகையில் தங்கள் செயற்பாடுகளை மேற்கொள்ளாமை தமிழ் – முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய பொது அமைப்பு உருவாகமுடியாத சூழலை ஏற்படுத்தியது. முஸ்லிம் மக்களும் சிங்கள இனவாதக் கட்சிகளுடன் இணைந்து செயற்பட்ட கொழும்புத் தலைமையை நம்பி ஏமாற்றமடைந்தனர். இதன் விளைவாகக் கொழும்புவாழ் முஸ்லிம் தலைமைகளின் மீது வட, கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு வெறுப்பு ஏற்படத் தொடங்கியது. இச் சூழலின் வளர்ச்சிப்போக்கில் கிழக்கிலிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தோற்றம் பெற்றது.

இதற்கிடையில், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிப்போக்கில் முஸ்லிம் மக்களைப் போராட்டத்துடன் இணைத்துச் செல்ல வேண்டிய வரலாற்றுக் கடமையினை நிறைவேற்ற விடுதலைப் புலிகள் இதயசுத்தியுடன் செயற்பட்டுவந்தனர். இப் பணியில் தடங்கல்களை ஏற்படுத்தக்கூடிய பல நடவடிக்கைகளை முஸ்லிம் மக்களுக்குத் தீங்கிழைப்பதன் மூலம் சில தமிழ்க் குழுக்கள் மேற்கொண்டு வந்தன. 1987 ஆம் ஆண்டு ஜூலை 29 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின் இந்திய அரசும் தனது கைக்கூலி அமைப்புக்கள் மூலம் முஸ்லிம் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டது. கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா அரசு கையாண்ட பிரித்தாளும் தந்திரத்தை இந்திய அரசும் கையாண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தினைச் சிதைக்க முற்பட்டது. இவற்றையெல்லாம் முறியடித்து, தமிழ் - முஸ்லிம் மக்களின் ஒற்றுமையினை வலுப்படுத்தி விடுதலைப் போரினை முன்னெடுக்கும் பணியினை விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

(தொடரும்)

# “ஒப்பரேஷன்லிபரேஷன்”

ஸ்ரீலங்கா இராணுவம் விடுதலைப் புலிகள் மீதும் தமிழீழ மக்கள் மீதும் மேற்கொண்ட மிகவும் பெரியதும், மோசமானதுமான இராணுவ நடவடிக்கை ‘ஒபரேஷன, லிபரேஷன்’ ஆகும். இவ் ஒபரேஷன், லிபரேஷன் இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கம் இலங்கை பூராவும் கடந்த இரண்டரை வருடகாலமாக இரத்தம் தோய்ந்த அரசியலுக்கு அடிகோலியது எனலாம்.

களைக் கடக்கும் இடங்கள் அல்லது பாலங்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தால் மக்களின் நகர்ச்சியையும் போராளிகள் அல்லது இராணுவத்தின் விரைவான நகர்ச்சியையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரலாம்.

## ஓர் புவியியல் நோக்கு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெரிய அளவினதான ஓர்

கடற் பரப்பையும் கொண்டது. இதனால் கடலில்

யின் கடற்படையின் பூரண பயன்பாட்டையும் குடாநாட்டில் வடமராட்சிப் பகுதியிலேயே பாவிக்கலாம்என்பதினாலாகும். அதாவது வடமராட்சி நீண்ட கரையோரத்தைக் கொண்டது இக் கரையோரப் பகுதி ஆழமான

படையின் பீரங்கித் தாக்குதல் கரையோரப் பகுதியில் இருந்து தரைப் பகுதிநோக்கி மேற்கொள்ளப்பட்டது 6விமானப் படை விமானங்கள் ஹெலிகாப்டர்கள்தமது முழுப்பலத்தையும் பாவித்தன, குண்டுவீச்சுகள் சரமாரியாக இருந்தன. விமானப்படையின் தாக்குதல் இலங்கை இராணுவத்தின் முன்னேற்றத்திற்கு பேருதவியாக இருந்தது.

வடமராட்சியைத் தவிர தென்மராட்சியிலே அன்றி வலிகாமப் பகுதியிலே விமானப்

தது குறிப்பிடத்தக்கதாகும்.

வடமராட்சியில் இலங்கை இராணுவம் மேற் கொண்ட ஒப்பரேஷன் லிபரேஷன் இஸ்ரேலிய இராணுவ தந்திரத்தை முழுமையாக ஒத்ததாகும். அதாவது குறுகிய காலப் பகுதியில் முப்படைகளின் உதவியுடன் எதிரி மீது ஓர் செறிவான தாக்குதலை மேற் கொள்ளுதலாகும். இந்த யுத்த தந்திரத்தை இஸ்ரேலுக்கு அறிமுகமாக்கியவர் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சரான மோசேதயான். இந்த யுத்த முறையை இஸ்ரேல் இன்றுவரையும் தனது பிரதான யுத்த தந்திரமாகக் கொண்டுள்ளது. கடைசியாக இஸ்ரேல் அரபு நாடுகளுடன் மேற் கொண்ட யுத்தத்தின் போதும் இத்தந்திரோபாயம் கடைப்பிடிக்கப்பட்டது.

தவிர வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களோ உள்நாட்டுப் பத்திரிகையாளர்களோ சுதந்திரமாக தமிழ்ப் பகுதிகளுக்கு வந்து செல்ல முடியாதிருந்தது.

இந்தியப்படையின் பாதுகாப்புடன் அமைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண சபையின் ஆட்சி இங்கிருந்தபோதுகூட வெளிநாட்டு ராஜதந்திரிகள் இவ்வளவு சுதந்திரமாகத் தமிழ்ப் பகுதிக்கு வந்து உண்மை நிலையை நேரில் அறிந்து செல்ல முடியாதிருந்தது.

வெளிநாடுகளும் வெளிநாட்டு நிறுவனங்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கென வழங்கிய உதவிகள் உண்மையிலேயே அந்த மக்களுக்குப் போய்ச்சேர்ந்தனவா, தாம் கொடுத்த உதவிகள் எப்படிப் பயன்படுத்தப்பட்டன என்பதைக்கூட அவர்கள் அறிந்து கொள்ள முடியாதிருந்தனர்.

வடக்கிலும் கிழக்கிலும் இப்பொழுது நிலவும் உண்மை நிலையை வெளிநாட்டு ராஜதந்திரிகளும் வெளிநாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும் நேரில் பார்த்து தெரிந்து தெளிவு பெற்றுள்ளதால் இந்தச் சூழ்நிலையைக் கெடுக்காமல் பேச்சுவார்த்தையில் நல்ல முடிவு காணவேண்டும் என்று இலங்கை அரசுக்கும் தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கும் அறிவுறுத்துவார்களென எதிர்பார்ப்போம்.

இலங்கை அரச படையினாலும் இந்திய இராணுவத்தாலும் அழித்துச் சிதைந்து கிடக்கும் தமிழ்ப் பகுதிகளைத் திட்டமிட்டமுறையில் புனரமைக்கவும் இப்பகுதி மக்கள் பொருளாதாரத்தை விருத்தி செய்யவும் வெளிநாட்டு ராஜதந்திரிகள், வெளிநாட்டு நிறுவனங்களின் வருகை உதவவும் வேண்டும்.

★ ★ ★

## தேசிய சொத்துக்கள்

நெடுந்தீவிலுள்ள குதிரைகள் வரவரக் குறைந்து வருகின்றன. போகிற போக்கைப் பார்த்தால் ''இப்பகுதியில்தான் முன்னர் குதிரைகள் இருந்தன'' என்று சொல்லுமளவுக்கு இன்னும் சில வருடங்களில் இங்கு குதிரைகளே இல்லாமல் போய்விடுமோ என்று அஞ்சவேண்டியுள்ளது.

நெடுந்தீவுக்கு மட்டுமல்ல தமிழீழத்துக்கே பெருமை தேடித் தரும் சொத்தாக நெடுந்தீவுக் குதிரைகள் விளங்குகின்றன.

ஆட்சிபீடத்தில் இதுவரை இருந்துவந்தவர்கள் நெடுந்தீவைப் பற்றியோ அங்கு வாழும் வரலாற்றுப் பெருமை மிக்க குதிரைகளைப் பற்றியோ அக்கறை கொண்டதில்லை. இத்தீவும் குதிரைகளும் சிங்களப் பகுதியில் இருந்திருந்தால் இப்பொழுது அது உல்லாசபுரியாக்கப்பட்டிருக்கும்.

நெடுந்தீவு வருங்காலத்தில் ஓர் உல்லாசபுரியாக வேண்டும். இதற்கு தீவுப்பகுதி மக்களின் ஒத்துழைப்பும் அவசியம்.

நெடுந்தீவுக் குதிரைகளை விற்பதற்கும் தனியார் உரிமை கொண்டாடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்க விஷயம்.

திருக்கோணமலை கோணேசர் கோட்டை (பிரடரிக்கோட்டை) மான்களும் அருகி வருகின்றன. பல மான்கள் படையினரின் உணவாகப் போய்விட்டதாகச் சொல்லப்படுகிறது.

நெடுந்தீவுக் குதிரைகளும் திருக்கோணமலை கோணேசர் கோட்டை மான்களும் நமது தேசிய சொத்துக்கள்.

இவற்றை அழியவிடாது பேணிப்பாதுகாக்கவேண்டியது மிகமிக அவசியம்.

## ஓர் புவியியல் நோக்கு

வடமராட்சியில் ஜே. ஆர் அரசு நடத்திய வரலாற்று முக்கியத்துவம் பெற்றுவிட்ட 'ஒப்பரேஷன் லிபரேஷன்' மூன்றாவதாண்டு நினைவாக இக் கட்டுரை இங்கு வெளியிடப்படுகிறது.

**ஜெயா**

ஸ்ரீலங்கா இராணுவம் விடுதலைப் புலிகள் மீதும் தமிழீழ மக்கள் மீதும் மேற்கொண்ட மிகவும் பெரியதும், மோசமானதுமான இராணுவ நடவடிக்கை 'ஒபரேஷன், லிபரேஷன்' ஆகும். இவ் ஒபரேஷன், லிபரேஷன் இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கம் இலங்கை பூராவும் கடந்த இரண்டரை வருடகாலமாக இரத்தம் தோய்ந்த அரசியலுக்கு அடிகோலியது எனலாம்.

ஒபரேஷன், லிபரேஷன் இலங்கை இராணுவத்தினராலும் மொசாட் போன்ற வெளிநாட்டு உளவுப் பிரிவினராலும் மிகவும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையாகும். அத்தோடு இலங்கையின் முப்படைகளின் பெரும் பலமும் இதில் பாவிக்கப்பட்டது. குறிப்பாக விமானப்படை, கடற்படை ஆகியவற்றின் முழுப்பலமுமே பாவிக்கப்பட்டதெனலாம்.

புவியியல் ரீதியில் யாழ்ப்பாணக் குடாநாடு ஓர் தனிப் பிரதேசமாக இருப்பினும், இப்பிரதேசம் மூன்று அலகுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இதற்கு தொண்டமனாறு கடல் நீரேரியும், நாவற்குளி - உப்பாறும் காரணங்களாக இருக்கின்றன.

தொண்டமனாறு கடல் நீரேரி வடமராட்சியை வலிகாமப் பகுதியில் இருந்தும் தென்மராட்சிப் பகுதியில் இருந்தும் பிரிக்கின்றது. நாவற்குழி உப்பாறு தென்மராட்சியை வலிகாமப் பகுதியில் இருந்து பிரிக்கின்றது. இக் கடலேரிகளுக்கு ஊடாகச் செல்லும் ஏழு பிரதான வீதிகள் மட்டுமே இம் மூன்று அலகுகளையும் இணைத்து வைத்திருந்தன. அப் பாதைகளாவன தொண்டமனாறு-பருத்தித்துறை வீதி (தொண்டமனாறு) யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதி (வல்லை) கொடிகாமம் - பருத்தித்துறைவீதி (முள்ளி) சாவகச்சேரி – பருத்தித்துறைவீதி (அந்தனத் திடலுக்கு அருகில்) புத்தூர் - மீசாலை வீதி, கைதடி – கோப்பாய் வீதி, யாழ்ப்பாணம் - கண்டி வீதி என்பனவே இப்புவியியல் அலகுகளைத் தொடுக்கும் வீதிகளாகும். இவ்வீதிகள் கடல் நீர் ஏரிகளைக் கடக்கும் இடங்கள் அல்லது பாலங்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தால் மக்களின் நகர்ச்சியையும் போராளிகள் அல்லது இராணுவத்தின் விரைவான நகர்ச்சியையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெரிய அளவிலான ஓர் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள இலங்கை இராணுவச் வட்டாங்கள் ஆலோசித்தபோது குடாநாட்டின் புவியியல் நிலைமை வெகுவாகக் கவனத்திற் கொள்ளப்பட்டது.

இலங்கை இராணுவ சட்டங்களைக் குடாநாட்டிற்குள் ஓர் இராணுவ நடவடிக்கைக்கு வடமராட்சியைத் தெரிவு செய்வதற்குப் பல காரணிகள் இருந்தன. இதற்கு முக்கியமான காரணமாக அமைந்தது வடமராட்சியின் புவியியல் பண்பு ஆகும்.

ஒப்பீட்டு ரீதியில் ஏனைய குடாநாட்டு புவியியல் அலகுகளைவிட வடமராட்சி பிரதேச ரீதியில் சிறியதானதாகும். அதாவது மனிதவளம் குறைவான இலங்கை இராணுவத்தால் பிரதேசத்தைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருதல் இலகுவாக இருக்கும் என்பதாகும்.

இரண்டாவதாக வடமராட்சியை ஏனைய குடாநாட்டின் பகுதியில் இருந்து துண்டாடுவதானால் நான்கு வீதிகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தால் வடமராட்சிக்கு வெளியில் இருந்து உதவி வருவதோ உள்ளே இருந்து விரைவில் தப்பிச் செல்வதோ இலகுவான காரியமாக இருக்காது. அதேவேளை இந்த நான்குவீதிகளில் ஒன்று பருத்தித்துறை - தொண்டமனாறு ஏற்கனவே இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது.

மூன்றாவது முக்கியமான காரணமாக இருந்த இலங்கையின் கடற்படையின் பூரண பயன்பாட்டையும் குடாநாட்டில் வடமராட்சிப் பகுதியிலேயே பாவிக்கலாம் என்பதினாலாகும். அதாவது வடமராட்சி நீண்ட கரையோரத்தைக் கொண்டது இக் கரையோரப் பகுதி ஆழமான கடற் பரப்பையும் கொண்டது. இதனால் கடலில் இருந்து தாக்குதலை பிரதேசத்துக்குள் செய்யக் கூடியதாக இருந்ததோடு தேவையேற்படின் கடற்பரப்பில் இருந்து இராணுவத்தை இறக்குவதற்கும் வாய்ப்பு இருந்தது. ஆனால் தென்மராட்சிப் பகுதியிலோ வலிகாமப் பகுதியிலோ கடற்படையினால் இராணுவத்திற்கு பெரிய உதவி ஏதும் செய்ய முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த அம்சமாக இருந்தது வடமராட்சிப் பிரதேசம் முன் ஒடுங்கிய வால் போன்ற பிரதேச அமைப்பைக் கொண்டிருந்ததினால் கடற்படையினாலும் இராணுவத்தினாலும் சூழப்படும் போது போராளிகள் இவ் இடுக்கிக்குள் அகப்பட்ட நிலையில் பூறியடித்துவிடலாம் என்பது இலங்கையின் இராணுவக் கணிப்பீடாக இருந்தது.

மேலும் விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தின் மையம் வடமராட்சியாக இருந்தது. அப்பிரதேசத்தில் நடத்தப்படும் இராணுவ நடவடிக்கையினால் மக்களும், போராளிகளும் பேதலிக்க வேண்டும் என்பதே இலங்கை அரசின் நோக்கமாக இருந்தது.

மேற் கூறிய புவியியல் அம்சங்களை ஆதாரமாகக் கொண்டே ஒப்பறேஷன் லிபரேஷன் தொடங்கியது என்பது சில மணி நேரத்திலேயே புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

விமானப்படையின் உதவியுடன் வடமராட்சியும் ஏனைய பகுதிகளை இணைக்கும் பகுதிகளில் இராணுவம் இறக்கப்பட்டது பருத்தித்துறை-யாழ்ப்பாண வீதியில் வல்லையிலும், கொடிகாமம் பருத்தித்துறை வீதியின் முள்ளியிலும் இராணுவம் இறக்கப்பட்டது. சாவகச்சேரி பருத்தித்துறை வீதியில் உள்ள யாக்கரு பாலம் தகர்க்கப்பட்டது. அதாவது இராணுவ நடவடிக்கைகளின் முதலம்சமாக வடமராட்சிப் பிரதேசம் ஏனைய பகுதியில் இருந்து துண்டாடப்பட்டது.

அடுத்த அம்சமாக கடற்படையின் பீரங்கித் தாக்குதல் கரையோரப் பகுதியில் இருந்து தரைப் பகுதிநோக்கி மேற்கொள்ளப்பட்டது விமானப் படை விமானங்கள் ஹெலிகாப்டர்கள் தமது முழுப்பலத்தையும் பாவித்தன, குண்டுவீச்சுகள் சரமாரியாக இருந்தன. விமானப்படையின் தாக்குதல் இலங்கை இராணுவத்தின் முன்னேற்றத்திற்கு பேருதவியாக இருந்தது.

வடமராட்சியைத் தவிர தென்மராட்சியிலே அன்றி வலிகாமப் பகுதியிலே விமானப் படையினாலோ, கடற்படையினாலோ தமது சேவையைச் திறம்படச் செய்திருக்க முடியாது. விமானப் படையின் சேவைக்கு ஜனாதிபதியின் பாராட்டுக்கிடைத்

காலப் பகுதியில் முப்படைகளின் உதவியுடன் எதிரி மீது ஓர் செறிவான தாக்குதலை மேற்கொள்ளுதலாகும். இந்த யுத்த தந்திரத்தை இஸ்ரேலுக்கு அறிமுகமாக்கியவர் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சரான மோசேதயான். இந்த யுத்த முறையை இஸ்ரேல் இன்றுவரையும் தனது பிரதான யுத்த தந்திரமாகக் கொண்டுள்ளது. கடைசியாக இஸ்ரேல் அரபு நாடுகளுடன் மேற் கொண்ட யுத்தத்தின் போதும் இத்தந்திரோபாயம் கடைப்பிடிக்கப்பட்டது.

குறிப்பாக தென் லெபனானின் பிரதான நகரமான 'சிடோன்'' இவ்வாறே இஸ்ரேலியரின் முப்படைகளின் தாக்குதலுக்கும் உள்ளாகியது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பது எப்படி ?

(நேற்றைய தொடர்ச்சி)

இனி, ஒரு மூடிய அகழியொன்றை எவ்வகையில் அமைக்க வேண்டும் எனப் பார்ப்போம். இதன்போது பாவனைக்குத் தேவையான பகுதியாகிய 6 அடி ஆழமான கிடங்கு ஒன்று வெட்டப்பட்டாலே போதுமானதாகும். ஆனால் இவ்வாறு வெட்டப்பட்டிருப்பின் அதற்கு தேவையான பாதுகாப்பான கூரையானது நில மட்டத்தின் மேலேயே அமைக்கப்பட வேண்டியதாயிருக்கும். இவ்வாறு அமைப்பது இலகுவில் பாதுகாப்புப் படையினரின் கவனத்தை ஈர்த்துவிடும் என்பதாலேயே இங்கு கூறப்படும் மூடிய அகழியமைப்புகள் அனைத்தின் கூரைகளையும் நிலத்தின் கீழேயே அமைக்குமாறு கூறப்பட்டிருக்கிறது. இருப்பினும் உங்களால் நில மட்டத்தின் மேல் கூரையமைப்பு அமைக்கப்பட்டு அதனை வைக்கோலினால் மூடி ஒரு வைக்கோற் போரைப் போலவோ, அல்லது குப்பைகளை குவித்து ஒரு குப்பை மேட்டைப் போலவோ, அன்றிவேறு யாதாயினும் ஒரு வழியின் மூலம் அதனுள் அகழி இருப்பதை மறைக்கக் கூடியவாறு இருப்பின் அவ்வாறேயும் கூட அமைக்கலாம். அடுத்து, கூரையமைப்பினை கருத்தில் கொள்ளும் போது அதற்குத்தேவையான பொருட்களைப் பார்ப்போம். இலகுவில் கிடைக்கக் கூடிய பொருட்களான மரக் கட்டைகள், சிறு பாறைகள் அல்லது பெரிய உறுதியான கற்கள், மண் அல்லது மணல் சாக்குகள் போன்றவையே அவையாகும். இங்கு உதாரணத்துக்காக செய்முறைகளுடன் தரப்பட்டிருக்கும் மூடிய அகழியானது முழுதாக நிலத்தின் கீழ் அமைக்கப்பட்டதாகவும் மரக் கட்டைகள், சிறு பாறைகள், மண் போன்றவற்றைக் கொண்டு அமைக்கப்பட்ட 5 அடி உயரமுடைய கூரையினையும் கொண்டுள்ளது. இது ஒரு உதாரணமேயாகும். உங்களது அமைப்புகளும் இதே போல் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. மேலும் பாதுகாப்புள்ளதாக மாற்ற வேண்டுமாயின் கூரையின் உயரத்தினை நீங்கள் அதிகரிக்கலாம், ஆழமான கிடங்கு வெட்டுவது கடினமாக இருக்குமாயின் கூரையின் உயரத்தைக் குறைத்தோ அல்லது நிலத்துக்கு மேல் கூரை வரக்கூடியவாறோ அமைக்கலாம். கூரை அமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள் கூட உங்களுக்கு எவை இலகுவாகக் கிடைக்கிறதோ அவற்றினையே பயன்படுத்தலாம்.

(தொடரும்)

Registered as a News Paper at the G. P. O

# ஈழநாதம்

## த[illegible]மையால் மரங்கள்[illegible]கீழ் மாணவர்கள்

(சம்மாந்துறை)

வீரமுனை இராகிசிருஷ்ண சங்க வித்தியாலயத்தின் மாணவர்கள் மரங்களின்கீழும் கோவில் வீதியிலும் இருந்து கல்வி பயிலவேண்டியுள்ளது.

இப் பாடசாலையில் கட்டட வசதியின்றி பல காலமாக 600 மாணவர்களும் ஆசிரியர்களும் இந்த நிலையில் உள்ளனர்.

தற்காலிக கொட்டில்கள் அமைத்து கொடுப்பதற்கு தொண்டர் நிறுவனங்களிடம் விண்ணப்பித்தும் எதுவித பயனும் கிடைக்கவில்லை என பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இக்கிராம மக்கள் வசதி குறைந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வன்னேரி நடமாடும் செயலகத்தில்
# காணி உறுதிகள் பர்மிட்டுகள் வழங்கப்பட்டன

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் முதலாவது நடமாடும் செயலகம் கிளிநொச்சி மாவட்டத்தின் மிகவும் பின் தங்கிய போக்கு வரத்து வசதியற்ற வன்னேரிக்குளம் கிராமத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்ற இந் நடமாடும் செயலகத் ல் பல திணைக்களங்களின் தலைவர்களும் அரச அதிகாரிளும் கலந்து கொண்டனர்.

இந் நடமாடும் செயலகம் வன்னேரிக் குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்றது. காலை 10 மணிக்கு ஆரம்பமான இச் செயலகம் மாலை 5மணிக்கு மேலும் நடைபெற்றது.

இச் செயலகத்தால் அப் பகுதியில் வாழுகின்ற சுமார் 4000 குடும்பங்கள் பயனடைந்தனர், பலருக்கு சுவர்ண பூமி உறுதிகளும், காணி பர்மிட்டுகளும் வழங்கப் பட்டன காணிப் பங்கீடு சம்பந்தமான பல விசாரணைகள் நடைபெற்றன.

உணவு முத்திரை, வறிய குடும்பங்களுக்கு உதவிப் பணம் வழங்குவது, பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவு சம்பந்தமான பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டது.

நீர்பாசனம் மின்சாரம், விவசாயம், கால்நடை வளர்ப்பு வன்செயலால்ப் பாதிக்கப்பட்டவர்களின் நிவாரணம், குடியேற்றத் திட்டம் சம்பந்தமான பல விசாரணைகள் இங்கு நடைபெற்றன. மக்கள் பிரச்சினைகள் பல உடனடியாகத் தீர்த்து வைக்கப்பட்டன தீர்க்கப்படாத பல பிரச்சினைகளை வெகு விரைவில் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மாதக் கணக்கில் வருடக் கணக்கில் கிளிநொச்சி செயலகத்திற்கும் சென்று செய்து முடிக்கப்படாத பல பிரச்சினைகள் ஒரே நாளில் தீர்த்து வைக்கப்பட்டதால் வன்னேரிக்குளம் மக்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்து காணப்பட்டனர்.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு க. மாணிக்கவாசகர் பதிலளிக்கையில் கூறியதாவது

மிகவும் பாதிக்கப்பட்ட மக்கள் வாழுகின்ற பின் தங்கிய இம்மாவட்டத்தில் கடமை செய்ய வந்துள்ள எவரும் சம்பளத்திற்காக வேலை செய்பவர்களாக இருக்க முடியாது. மக்களுக்கு சேவை செய்பவர்களாகவே இருக்க வேண்டும்.

இங்கு கடமை செய்யும் அதிகாரிகள் ஊழியர்கள் பலர் அவ்வாறே கடமையாற்றுகின்றனர். முருகண்டியிலிருந்து வன்னேரிக் குளம் செல்லும் நீளமான இப் பாதை மிகவும் சீர்கெட்டுள்ளது. இப் பாதையை தார் போட்டு செப்பனிடுவதானால் பல மில்லியன் ரூபா தேவைப்படும். அதற்குரிய பணம் எம்மிடம் இல்லை. ஆதலால் இப் பாதைக்குத் தார் இடாவிட்டாலும் போக்கு வரத்துக்கு ஏற்றவாறு சம்பந்தப் பட்ட திணைக்களம் மூலம் செய்து தருவேன். அத்தோடு பஸ் ஓட வைப்பேன்.

ஆனை விழுந்தான் குளத் திட்டத்தை மேற் கொள்ளப் 6 மில்லியன் ரூபாவுக்குமேல் செலவாகும் அதற்கும் எம்மிடம் பணம் இல்லை இருந்தாலும் குள வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குளம் கட்டி முடிந்தால் இதனால் இங்கு குடியேற்றப் பட்ட 191 குடும்பங்களும் நல்ல நிலையில் வாழ முடியும் என்றார்.

## வேலணை - அராலி வீதி திருத்த நிதி ஒதுக்கீடு

(வேலணை)

வேலணை - அராலி கடல் வீதியை மீண்டும் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுவருகிறது.

சுமார் இருபது லட்சம் ரூபாவை இதற்காக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒதுக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அராலி - வேலணை கடல் வீதி பூரணமாக அமைக்கப் பட்டால் தீவுப்பகுதியிலிருந்து வலிகாமம் போன்ற பகுதிகளுக்கு யாழ்ப்பாணம் வராமலே பயணம் செய்யலாம். என்பது குறிப்பிடத் தக்கது.

இந்த வீதியை திருத்தியமைக்குமாறு இப்பகுதி மக்கள் பல கோரிக்கைகளை விடுத்து வந்தனர்.

## கை துடைக்கப் பெண்ஷன் படிவங்கள்

(யாழ்ப்பாணம்)

மலேசிய அரசாங்கத்தின் இளைப்பாற்றிச் சம்பளம் பெறுவதற்கான இளஞ்சிவப்பு நிறமுறைய தி. உடன். க. ப. 128 ஊ இலக்கப் படிவம் [illegible] கடை ஒன்றில் கை துடைப்பதற்காகக் கட்டுக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. இத்தகைய படிவங்களுக்குக் கச்சேரியில் பெருந் தட்டுப்பாடு [illegible]

## நயினாதீவு இறங்கு துறை திருத்தம்

(தீவுப்பகுதி)

நயினாதீவு துறைமுகத்தில் உள்ள இறங்கு பாலம் சுமார் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் திருத்தியமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதி ஒதுக்கப்பட்டதால் இந்த வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய உற்சவம் தொடங்கும் முன்னதாகவே இந்த வேலைகள் பூர்த்தியாக்கப்படவுள்ளதாக சம் [illegible]

## மீன் நோய் பரவுவதைத் தடுக்க ஆய்வு உத்தியோகத்தர் தேவை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலிருந்து அம்பாறை மாவட்டத்திற்கு பரவியுள்ள மீன் நோய் பரவுதலைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை எடுப்பதற்காக மீன் நோய் சிறப்பு ஆராய்ச்சி உத்தியோகத்தரொருவரை அனுப்பி வைக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட மீன் பிடி விரிவாக்க உத்தியோகத்தர் திரு. ரி. ஜோர்ஜ் உள்நாட்டு மீன்பிடி அத்தியட்சகரைக் கேட்டுள்ளார்.

இம்மாவட்டத்தில் இந் நோய் காரணமாக தொள்ளாயிரம் மீனவர்கள் பாதிக்கப் பட்டுள்ளதால் நிவாரணம் வழங்குமாறு அரச அதிபரையும் அவர் கேட்டுள்ளார்.

அதே நேரம் இக்கினியாகலையிலிருந்து வருகை தந்த நீர் விலங்கியல் ஆய்வு உத்தியோகத்தர்கள் இம்மாவட்டத்தில் நடாத்தி ஆய்வு அறிக்கை இது வரை அனுப்பி வைக்கப் படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (37)

### ஆதம்பா

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணியின் முக்கியஸ்தர்களும், முஸ்லிம் வட்டாரத்தைச் சேர்ந்த பிரமுகர்களும் உரையாற்றவுள்ளார்கள்.

தமிழ் பேசும் மக்கள் யாவரும் இக் கூட்டத்தில் கலந்து ஆதம்பாவா அவர்களுக்கு அஞ்சலி செலுத்துமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் அழைக்கின்றனர்.

### மாகாணசபைக்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது கோட்டக் கல்வி உதவிப் பணிப்பாளர் மூலம் உறுதி செய்து அனுப்ப வேண்டும்.

இந்த நடைமுறையை கடைப்பிடிக்காவிடில் ஆசிரியர்களினால் கல்விச் சேவைக்குழுவுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியாது.

ஆசிரியர்கள் தமது மேன் [illegible]

## கருத்தரங்கும்

## கூட்டுப்பண்ணைக்குஉதவுமாறு அரச அதிபரிடம் கோரிக்கை

(சாவகச்சேரி)

கூட்டு விவசாயப் பண்ணைத் திட்டமொன்றினை மேற் கொள்ளுவதற்குஎமக்கு அரசாங்கம் மூலம்கடனுதவிவழங்க வேண்டும். நாம் அத்துடன் ஆடு மாடு, கோழி போன்றனவற்றையும் வளர்ப்பதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ளவுள்ளோம்.

மேற்கண்டவாறு மிருசுவில் படித்த மகளிர் குடியேறத்திட்டக்குடியிருப்பாளர்கள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு அன்ரன் அல்பிரெட்டிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் திரு அன்ரன் அல்பிரெட் தென்மராட்சிப் பகுதிக்கு உத்தியோக பூர்வமான விஜயம் ஒன்றை மேற்கொண்டார். இவர் மிருசுவில் படித்த பெண்கள் குடியேற்றத் திட்டத்திற்கும் விஜயம் செய்தார் அப்பொழுதே இவரிடம் படித்த பெண்கள் குடியேற்றவாசிகள் இக்கோரிக்கையை விடுத்தனர் அவர்கள் மேலும் தமது கோரிக்கையில் கூறியதாவது.

எமது இந்தக் குடியேற்றத் திட்டம் ஆரம்பமாகிசுமார் கால்நூற்றாண்டிற்கு மேலாகிறது. இங்குநாம்பெரும்பாலும் மிளகாய் செய்கையையேமேற்கொண்டுவந்தோம். மேலும் மிளகாய்ச் செய்கையை இங்கு தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் நாம் ஒரு கூட்டு விவசாய பண்ணையை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற் கொள்வதற்கு அரசாங்கம் மூலம் கடன் பற வசதிகள் செய்து தரப்பட வேண்டும். நாம் ஆடு, மாடு, கோழி வளர்ப்புகளை மேற்கொண்டு அதன்மூலம் ஜீவனம் நடத்தலாம். எனத் தெரிவித்தனர்.

இக் கோரிக்கைகளைப்பெற்றுக்கொண்ட அரசாங்கஅதிபர் இக் கோரிக்கைகள் பற்றி ஆலோசித்துப்பதிலளிப்பதாக உறுதியளித்துச் சென்றுள்ளார். (35)

### விடுதலைப்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர்கள் தெரிவித்த கடும் ஆட்சேபனையின் விளைவுதான் இனியும் ஈ. பி. ஆர். எல். எவ் குழுவைச் சந்திக்க வேண்டிய அவசியமில்லை என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா கூறியிருப்பதற்கு காரணம் என்று சருதப்படுகிறது.

ஜனாதிபதி பிரேமதாசாவை ஈ. பி. ஆர். எல். எவ். குழு சந்தித்துப் பேசவிருப்பதாக அக் குழுவைச் சேர்ந்த பிரேமச்சந்திரன் எம். பி. பத்திரிகைகளுக்குக் கொடுத்த செய்தியும் ஜனாதிபதிக்கும் அமைச்சர் ரஞ்சனுக்கும் ஆத்திரமூட்டியிருக்கிறது,

இதன் விளைவாகவே இனி விடுதலைப் புலிகளை தவிர்ந்த ஏனைய குழுக்களுடன் அரசு நேரடியாகப் பேச்சு வார்த்தை நடத்துவதில்லை என்று தீர்மானித்திருப்பதாக அறியவருகிறது.

பிரச்சனைகளுகுத் தீர்வு காணவும் தங்கள் பிரச்சினைகளை எடுத்துக் கூறவும் விரும்பும் எந்தக் குழுக்களும எந்தக் கட்சியும் சர்வ கட்சிமாநாட்டில் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று அரசு முடிவு செய்து விட்டதாகவும் இந்த வகையில் ஈ.பி.ஆர். எல். எப் சர்வ கட்சி மாநாட்டில் சேர்ந்து [illegible]

## விபத்தில் இருவர் காயம்

(வண்ணார்பண்ணை)

நேற்று இரவு 7-15 மணியளவில் ஆறுகால் மடத்தடி வைரவ கோயிலடிக் அண்மையில் நிறுத்தப்பட்டிருந்த சிறு உழவு யந்திரத்துடன் வேகமாக வந்த மோட்டார் சயிக்கிள் மோதியதில் அதில் பயணம் செய்த இருவர் படுகாயமடைந்துள்ளனர். ஒருவரின் இடதுபக்க கால் துண்டிக்கப் பட்ட நிலையிலிருந்தது. அயலவரின் உதவியுடன் காயமடைந்தவர்கள் யாழ். பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டனர். (44)

## ஆண்டுப் பொதுக் கூட்டம்

(பண்டத்தரிப்பு)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ் மாவட்ட ஆண்டுப் பொதுக் கூட்டம் இன்று கல்லை 9 மணியளவில் சி. தார்சீயஸ் தலைமையில் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறும்.

யாழ் கல்வித் திணைக்களப் பிரதம அதிகாரி அ தங்கராசா பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (12

## ஆகஸ்டில் இடமாற்றசபை

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாண இடமாற்ற சபை மீண்டும் எதிர் வரும் ஆகஸ்ட் மாதம் கூடும். [illegible]

ரூபாவை இதற்காக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒதுக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதியை திருத்தியமைக்குமாறு இப்பகுதி மக்கள் பல கோரிக்கைகளை விடுத்து வந்தனர்.

# கை துடைக்கப் பெனஷன் படிவங்கள்

(யாழ்ப்பாணம்)

மலேசிய அரசாங்கத்தின் இளைப்பாற்றிச் சம்பளம் பெறுவதற்கான இளஞ்சிவப்பு நிறமுறைய தி. உடன். க. ப. 128 ஊ இலக்கப் படிவம் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியிலுள்ள சைவக் கடை ஒன்றில் கை துடைப்பதற்காகக் கட்டுக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. இத்தகைய படிவங்களுக்குக் கச்சேரியில் பெருந் தட்டுப்பாடு நிலவுவது குறிப்பிடத்தக்கதாகும்,

## தவறிழைக்கும்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் கொள்கையை உத்தியோகத்தர்கள சரிவரச்செயற்படுத்த வேண்டும் எனவும் ஜனாதிபதி கூறினார்.

தவறிழைக்கும் அரசாங்க அதிகாரிகள், உத்தியோகத்தர் மீது நீதிமன்ற நடவடிக்கை எடுப்பதற்கும் சட்டங்கள் வகுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசின் செல்வாக்கை தவறாக பயன்படுத்தும் மக்கள் பிரதிநிதிகளின் குடியுரிமையை ரத்து செய்யவும் சட்டத்தில் வகை செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

## ஒப்பரேஷன்

(5 ஆம்பக்கத் தொடர்ச்சி)

வடமராட்சித் தாக்குதலும் முற்று முழுதாக இஸ்ரேலிய யுத்த தந்திரத்தை ஒத்திருந்தது குறிப்பாகவல்வெட்டித்துறை மீதான தாக்குதல் லெபனானின் சிடோன் நகரத் தாக்குதலை முற்றிலுமாக ஒத்திருந்தது. அப்போது இலங்கை இராணுவத்தின் பிரதான ஆலோசகாகள் இஸ்ரேலியர்கள் என்பது இதிலிருந்தே தெரிகின்றது.

ஆனால் இப் பாரிய ஒப்பரேசன் லிபரேசன் இராணுவ நடவடிக்கை இலங்கையின் இராணுவ வரலாற்றில் மட்டுமல்ல இலங்கையின் அரசியல் வரலாற்றிலும் பெரிய அளவினதான தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தியாவின் நேரடித் தலையீட்டிற்கும் வழிவகுத்ததோடு இவர்களின் வடக்கு-கிழக்கில் இருந்த போராட்டமையத்தை நாடு பூராவும் பரவச்செய்ததும் எனலாம்.

# ஜொனியன்ஸ்-ஜொலிஸ்ரார் இன்று மோதல்

(யாழ்ப்பாணம்)

ஷப்றா கிண்ணத்திற்காக ஷப்றா ஆதரவுடன் ஜொலிஸ்ரார் விளையாட்டு கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கிரிக்கட்போட்டியின் இறுதிப்போட்டி இன்று காலை 9,00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்.

ஷப்றா கிண்ணத்திற்காக நான்காவது தடவையாக நடத்தப்படும் இப்போட்டிகள் இம்மாதம் 9 ஆம் திகதி முதல் நடைபெற்று வந்தன. 19 கழக அணிகள் நொக்கவுட் முறையில் நடத்தப்பட்ட இந்தப் போட்டியில் பங்கு பற்றின.

இன்றைய இறுதியாட்டத்தில் விளையாடுவதற்கு யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணியும் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியும் தெரிவாகியிருந்தன என்பது தெரிந்ததே.

ஜொனியன்ஸ் அணிக்கு ஆர் மசிந்தாவும் ஜொலிஸ்ரன் அணிக்கு கே. பிரேம்நாத்தும் தலைமை வகிக்கிறார்கள்

இரு அணிக்கும் பல அனுபவம் முதிர்ந்த சிறந்த வீரர்களையும். இளைய உற்சாகமான துடிப்பான வீரர்களையும் கொண்டுள்ளன.

இன்றைய போட்டியில் மேலதிக அரச அதிபர் திரு. கே. சண்முகநாதன் பிரதம விருந்தினராக கலந்துகொள்கிறார். திருமதி எஸ். சண்முகானந்தன் வெற்றி பெற்ற வீரர்களுக்கான பரிசில்களை வழங்குவார்.

இன்றைய ஆட்டத்தில் சிறப்பாக விளையாடும் சிறந்த துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்துவீச்சாளர் சிறந்த பந்து தடுப்பாளர், பல்துறை வல்லுநர் ஆகியோருக்கு விசேட பரிசில்கள் வழங்கப்படவிருக்கின்றன.

## தாபனம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சபைக்குரிய அதிகாரங்கள் என தெரிவித்தும் இடமாற்றம் போன்ற செயல்பாடுகளில் தொடர்ந்து ஈடுபகிறது.

இதனால் ஏற்படும் முரண்பாடுகளினால் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இவ்விவகாரம் குறித்து திரு. இ. ஜே. சற்குணராஜா கல்வி அமைச்சு செயலாளரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளபோது அதிகாரிகளின் தலையீடு இனிமேல் இடம்பெறமாட்டாது என தெரிவித்துள்ளார். (37)

## வீதி திருத்தத்திற்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

15 மைல்கள் வருவதற்கு மூன்று மணித்தியாலங்கள் எடுத்ததையும் அவர் இங்கு குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் உள்ள குறைகளை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சண்முநாதன் இம் மாநாட்டில் எடுத்துக் கூறினார்.

இதற்கும் பிரிட்டிஷ் தூதுவர் உதவிகள் செய்வதாக வாக்குறுதி அளித்தார்.

இந்த மாநாட்டில் முல்லைத்தீவு மாவட்ட உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (58)

## திருத்தம்

(தீவுப்பகுதி)

நயினாதீவு துறைமுகத்தில் உள்ள இறங்கு பாலம் சுமார் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் திருத்தியமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதி ஒதுக்கப்பட்டதால் இந்த வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய உற்சவம் தொடங்கும் முன்னதாகவே இந்த வேலைகள் பூர்த்தியாக்கப்படவுள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் அழைக்கின்றனர்.

## மாகாணசபைக்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது கோட்டக் கல்வி உதவிப் பணிப்பாளர் மூலம் உறுதி செய்து அனுப்ப வேண்டும்.

இந்த நடைமுறையை கடைப்பிடிக்காவிடில் ஆசிரியர்களினால் கல்விச் சேவைக்குழுவுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியாது.

ஆசிரியர்கள் தமது மேன்முறையீட்டை உரிய மாகாண கல்விப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்துதீர்த்துக்கொள்ள வேண்டும்.

இதற்கான சுற்றுநிருபத்தை தாம் எல்லா கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி இருப்பதாக ஜோர்ஜ் மென்டிஸ் தெரிவித்தார்.

## நாம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லையில், கடந்த காலத்தில் அராஜக சக்திகளால் பலவந்தமாக சேர்த்துக் கொள்ளப்பட்ட இளைஞர்கள் நூற்றுப் பத்துப்பேர் விடுவிக்கப்பட்டனர்.

இவ் விடுவிப்பு சம்பவத்தில் மேலும் ஆஞ்சநேயர் பேசும்போது எமது போராட்டத்திற்கு எதிராக செயற்படும் சக்திகளால் சீரழிக்கப்பட்டிருந்த எமது இளைஞர்களை இன்று உங்கள் முன்னிலையில் அவர்களுடைன் பெற்றோர்கள் உறவினர்கள் ஆகியோரிடம் விடுவிக்கின்றோம். இந்த இளைஞர்கள் எதிர்காலத்தில் எமது சமுதாயத்திற்கு பயன்படக்கூடிய தலைசிறந்த பிரஜைகளாக மாற்றப்பட வேண்டியது பெற்றோர்களதும், உறவினர்களதும் கடமையாகும்.

இன்று சிறிலங்கா அரசுடன் கூட்டுச் சேர்ந்து எம் மக்களை மீண்டும் இன்னல்களுக்குள்ளாக்கி நசுக்குவதற்கெனபுதிய திட்டங்களைதீட்டிக்கொண்டு சில தீய சக்திகள் முனைகின்றன இந் நிலையில் இந்த இளைஞர்களின் எதிர்காலம் இனியும் சீரழிந்து போகாது பார்த்துக்கொள்ள வேண்டியது பெற்றோர்களாகிய உங்களது கடமையாகும் என்றும் திரு. ஆஞ்சநேயர் குறிப்பிட்டார்.

இறுதியாக விடுவிக்கப்பட்ட இளைஞர்கள் இவ்வளவு காலமும் தம்மை பாதுகாத்து புதுசீர்திருத்தஅறிவுகளை புகட்டி பெற்றோர்களிடம் ஒப்படைத்த விடுதலைப் புலிகளிடம் இருந்து விடைபெற்றுக் கொண்டனர். (லோ)

பட்டுள்ளதால் நிவாரணம் வழங்குமாறு அரச அதிபரையும் அவர் கேட்டுள்ளார்.

அதே நேரம் இக்கினியாகலையிலிருந்து வருகை தந்த நீர் விலங்கியல் ஆய்வு உத்தியோகத்தர்கள் இம்மாவட்டத்தில் நடாத்தி ஆய்வு அறிக்கை இது வரை அனுப்பி வைக்கப் படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (37)

# கருத்தரங்கும் பயிற்சி

(யாழ்நகர்)

இலங்கை பூராகவும் உள்ள தமிழ் மொழி மூலம் சமூகக் கல்வி ஆசிரிய ஆலோசகர்களுக்கான கருத்தரங்கும் பயிற்சியும் இம்மாதம் 29 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தொடக்கம் 31 ஆம் திகதி வியாழக் கிழமை வரை கொழும்பு றிட் அவனியூவில் உள்ள தேசிய சுவடிக்கூட கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது.

இலங்கை தேசிய கல்வி நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இப் பயிற்சி கருத்தரங்கில் பல்கலைக் கழக வரலாற்று விரிவுரையாளர்கள் கருத்துரை வழங்கவுள்ளனர். (52)

## திரையரங்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மது போதையில் வந்த நபர் படக்காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் இடையிலே தியேட்டரை விட்டு வெளியேற முயன்றபோது மனேஜருக்கும் அந் நபருக்குமிடையே நடந்த கைகலப்பின் போது இருவரும் காயமடைந்தனர்,

கத்தியால் குத்திய நபரை நகர பாதுகாப்பு ஊழியர்கள் பிடித்து தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தனர். தற்பொழுது அந்நபர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். (தி)

## நடமாடும்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேதி மட்டக்களப்புக் கச்சேரியில் நடைபெறவிருக்கும் அரசாங்க அதிபர்களின் மாநாட்டைத் தொடர்ந்து அடுத்த நாள் ஒன்பதாந்தேதிமாகாண இணைப்புக்குழுக் கூட்டம் மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

அரசு நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்துவதில்லை என்று தீர்மானித்திருப்பதாக அறியவருகிறது.

பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும் தங்கள் பிரச்சினைகளை எடுத்துக் கூறவும் விரும்பும் எந்தக் குழுக்களும எந்தக் கட்சியும் சர்வ கட்சிமாநாட்டில் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று அரசு முடிவு செய்துவிட்டதாகவும் இந்த வகையில் ஈ.பி.ஆர். எல். எப் சர்வ கட்சி மாநாட்டில் சேர்ந்து வழிகாட்டியிருப்பதாகவும் ஆளும் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## ரயில்மீது

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு சிறு காயங்கள் ஏற்பட்டன. கல்லெறி விழுவதை அவதானித்த பயணிகள் ரயிலின் உள்ளே விழுந்து படுத்துக் கொண்டமையினால் பெரியளவிலான பாதிப்புகள் ஏற்படவில்லை. இச் செயலினை சில விஷமிகள் செய்திருக்கலாம் என நம்பப்படுகின்றது. (தி)

சி. தார்சீயஸ் தலைமையில் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறும்.

யாழ் கல்வித் திணைக்களப் பிரதம அதிகாரி அ தங்கராசா பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (12

## ஆகஸ்டில் இடமாற்றசபை

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாண இடமாற்ற சபை மீண்டும் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் கூடும்.

இத்தகவலை வட-கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு செயலாளர் திரு. ஈ.ஜே. சற்குனராஜா தெரிவித்தார். (37)

## நான்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு பிணமாக யாழ். அரசினர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டிருந்ததாக விபரங்கள் பின்பு தெரியவந்தன.

அவ்வாறு பலியான இளைஞர் கொக்குவிலைச் சேர்ந்த தம்பித்துரை சுசீந்திரன் (வயது 22) எனத் தெரிவிக்கப்படுகிறது. (21)


# கண்ணீர் அஞ்சலி

26 - 05 - 90 அன்று உடல் நிலை பாதிப்புற்று எம்மைப் பிரிந்து மரணமடைந்த

**வீரவேங்கை நிசந்தன் (குடல்)**

**(வில்வரத்தினம்-ஜெயரத்தினம்)**

கோணேஸ்வரபுரம், திருமலை

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்

தமிழீழ மக்கள்



ஈழநாதம் நாளிதழில் செவ்வாய்க்கிழமைகளில் வெளிவருகின்றது

**ஆசிரியர் சத்தீசின்**

**A\L இரசாயனம்**

பரீட்சை மாதிரி வினாக்களும் - விடைகளும்

உங்கள் பிரதிகளை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31- ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 27-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.